[illegible]

ௐ

विविध विद्या

*VIVIDHA VIDYA*

காலாண்டிதழ்



# விவித வித்யா

தாரண, சித்திரை - ஆனி, ஆடி - புரட்டாதி

April - June, July - Sept. 2004



**ஸ்தாபக ஆசிரியர்:**

சுரபாரதி சேவா துரந்தரர்
வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,
சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்,
**பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா**

| | | | |
|---|---|---|---|
| மலர் 2<br>மலர் 3 | எழுந்திரு! விழித்திரு!<br>கோரியகருமம் நிறைவேறும்வரை<br>உழைத்திரு! | இதழ் 4<br>இதழ் 1 |  |

## இன்று புதிதாய்ப் பிறந்தோம்.

பழைமையில் காலூன்றிநின்று புதுமைகளை வரவேற்போம்.
வேற்றுமைகளிலிருந்து ஒற்றுமையை நாடுவோம்.
முரண்பாடுகளை முன்வைத்து ஒருமைப்பாடு காண்போம்.

7

நிர்வாக ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்)

25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌭𑌦𑍍𑌰𑌾 𑌸𑍁𑌮𑌤𑌿𑌰𑍃𑌜𑍂𑌯𑌤𑌾𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌤𑌿𑌰𑌭𑌿 𑌨𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑌾𑌮𑍍। 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌖𑍍𑌯𑌮𑍁𑌪 𑌸𑍇𑌦𑌿𑌮𑌾 𑌵𑌯𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌨 𑌆𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑌨𑍍𑌤𑍁 𑌜𑍀𑌵𑌸𑍇॥

**தேவானாம் பத்ரா ஸுமதிர் ரிஜூயதாம் தேவானாம் ராதிரபி நோ நிவர்த்ததாம். தேவானாம் ஸக்யமுப ஸேதிமா வயம் தேவா ந ஆயு: ப்ரதிரந்து ஜீவஸே.**

மங்கலமான தேவர்களின் நல்லாசிகள் நம்மீது நிலவட்டும். அவர்களின் வரங்கள் நமக்குப் பெருகட்டும். அவர்களின் நட்பு நமக்குக் கிடைக்கட்டும். இங்கே நாம் நீண்ட காலம் வாழ்வதற்கான ஆயுளை அவர்கள் நமக்குத் தரட்டும்.

**- ஆ நோ பத்ரா சூக்தம்.**

**ரிக் வேதம் 1.89**

"..........ஏன்? எப்படி? எவ்வாறு? என வேண்டும்போதெல்லாம் வினா எழுப்பி அவற்றுக்கு விடை காணும் திறன் மக்களிடையே மலர்ந்தாலன்றி கருத்துத் தெளிவு, சிந்தனைத் திறம் என்பன கைவரப்பெற்று அவர்கள் மேம்பாடடைதல் சாலாது. இத்திறன் மலர வழி சமைத்தலே சமுதாய நலனில் நாட்டமுள்ள அறிஞர் பணி

".............இதேபோன்று மக்கள் நலனில், சமுதாய மேம்பாட்டில் நாட்டமுள்ள நன்னெஞ்சினர் ஓரணியில் திரண்டு பயன் விளைக்கும் செயல்களில் ஈடுபடும் வலிமை பெறுவார்களாக."

*'செந்தழல்'*

*உதயன் 24 - 08 - 2001*

**துணையது வாய்வரும் தூயநற் சோதி**
**துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்**
**துணையது வாய்வரும் தூயநற் கந்தம்**
**துணையது வாய்வரும் தூயநற் கல்வியே**

**- திருமந்திரம் 281**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன்.....

அன்பான வாசகர்களே, இந்த இதழ் மிகத் தாமதமாக, இரண்டு இதழ்களைச் சேர்த்து ஒரே இதழாக வெளிவருகிறது. விவித வித்யா வின் ஸ்தாபகர் அமரர், பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்களின் வர்ஷாப்திகம், நிர்வாக ஆசிரியர் கோப்பாய் சிவம் லண்டனில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றிருந்தமை ஆகியன இத் தாமதத்திற்குக் காரணங்களாக அமைந்துவிட்டன. வாசகர்களிடம் பணிவன்புடன் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்.

இக்காரணத்தினால் வழமையான பல அம்சங்கள் பல இடம்பெறவில்லை. ஆனால் புதிய சிறப்பம்சங்கள் சில இடம்பெற்றுள்ளன.

தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளின் வளர்ச்சிக்காகவே சேவையாற்றுகின்ற ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்பற்றி ச.ப. சர்மா அவர்கள் ஒரு பல்கலைக்கழக மாணவருக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி (இதுவரை வெளிவராதது) அவரது வர்ஷாப்திக தினத்தை முன்னிட்டு இவ்விதழில் பிரசுரமாகிறது. இதே சங்கத்தின் ஸ்தாபகர்களுள் முக்கியமானவரான முகாந்திரம் சதாசிவ ஐயர் அவர்கள்பற்றிய கட்டுரையும் சம்ஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள் பகுதியில் இடம்பெறுவது தற்செயலாக அமைந்த பொருத்தமாகும். இவ்விரு பெருந்தகைகளின் ஜனன தினம் இவ்விதழ் வெளிவரும் காலத்தையொட்டி அமைவது (நவம்பர்) இன்னொரு சிறப்பம்சமாகும்.

இன்னொரு சம்ஸ்கிருத அறிஞராகிய சிக்ஷாநிபுண பிரம்மஸ்ரீ கி.சதாசிவ சர்மா அவர்களின் நேர்காணலும் இந்த இதழில் இடம்பெறுகிறது.

ஆசிரியரின் லண்டன் பயணத்தின்போது விவித வித்யாவிற்கு மேல்நாட்டு அன்பர்களிடம் இருக்கும் ஆதரவைக் கண்டு மகிழ்ச்சியடைய முடிந்தது. இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் அன்பர்கள் வழங்கிவரும் பேராதரவு பலவகைப்பட்டது. ஆர்வத்துடன் வாசித்தல், அபிப்பிராயம் வழங்குதல், ஆக்கங்கள் தருதல், நிதியுதவி செய்தல் என அது நீண்டுசெல்கிறது. நிதியுதவி வழங்கும் அன்பர்களின் பெயர்கள் இவ்விதழில் பிரசுரமாகியுள்ளன.

வெளிநாட்டு அன்பர்களுக்காகச் சர்வானந்தமயபீடம் ஒரு புதிய இணையத் தளத்தையும் திறந்திருக்கிறது. **www.geocity.com/sarvanandamayapeedam** என்பது அதன் முகவரி. அன்பர்கள் தொடர்புகொண்டு பயனடையலாம்.

.....நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தோத்திர அறிமுகம்

## ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய

# சிவ மானச பூஜா

ஆதிசங்கரர் அருளிய சிவமானச பூஜா எனும் தோத்திரம் இவ்விதழில் அறிமுகமாகிறது. மானசிகமாகவே சிவனைத் துதித்து அவருக்குச் செய்யவேண்டிய பூஜா கைங்கரியங்கள் யாவற்றையும் செய்வதாகப் பாவனை செய்து வழிபடுவதே இத்துதியாகும்.

இத்துதியின் ஐந்தாம் ஆறாம் பாடல்கள் மிகப் பரவலாகப் பயின்று வருவதனால் யாவரும் அறிந்திருப்பர். ஏனைய பாடல்களின் சுவையையும் பொருளையும் அறிய இது உதவும்.

𑌆𑌰𑌾𑌧𑌯𑌾𑌮𑌿 𑌮𑌣𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌂 𑌆𑌤𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌂
𑌮𑌾𑌯𑌾𑌪𑍁𑌰𑍀 𑌹𑍃𑌦𑌯 𑌪𑌙𑍍𑌕𑌜 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑍍।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌨𑌦𑍀𑌵𑌿𑌮𑌲 𑌚𑌿𑌤𑍍𑌤 𑌜𑌲𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑍈𑌃
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌧𑌿 𑌕𑍁𑌸𑍁𑌮𑍈𑌰𑌪𑍁𑌨𑌰𑍍𑌭𑌵𑌾𑌯॥

ஆராதயாமி மணிசந்நிபம் ஆத்மலிங்கம்
மாயாபுரீ ஹ்ருதய பங்கஜ ஸந்நிவிஷ்டம்
ச்ரத்தா நதீ விமல சித்த ஜலாபிஷேகம்
நித்யம் ஸமாதி குசுமைரபுநர்ப்பவாய.

**பொருள்:** ***மாணிக்க மணியை நிகர்த்தவரும் மாயையாலான என்னுடலின் இதயகமலத்தில் அமர்ந்திருப்பவருமாகிய – ஆத்மாவாகிய – சிவலிங்கப் பெருமானை சிரத்தையென்னும் நதியின் சித்தமென்னும் புனித நீரால் அபிஷேகத்தையும் ஸமாதியென்னும் நறுமலர்களால் அர்ச்சனையும் செய்து நித்தியமும் வழிபடுகிறேன், மீண்டும் பிறவாமலிருப்பதற்காக.***

காயமே கோயிலாகவும் மனமணி லிங்கமாகவும்கொண்டு ஆன்மலிங்க வழிபாடு செய்யும் உருவகப் பாடல்களைத் தமிழில் அப்பர் சுவாமிகளும் பிறரும் பாடியிருக்கிறார்கள்.

**𑌰𑌤𑍍𑌨𑍈𑌃 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌆𑌸𑌨𑌂 𑌹𑌿𑌮𑌜𑌲𑍈𑌃 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌂।**
**𑌨𑌾𑌨𑌾𑌰𑌤𑍍𑌨 𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌂 𑌮𑍃𑌗𑌮𑌦𑌾𑌮𑍋𑌦𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌂 𑌚𑌨𑍍𑌦𑌨𑌂।**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதீ ி஑ஂ஑஑க ஬ி஬ு஬஑ஶ ஦ிதஂ ஬ூஷஂ ஑ ஹஙஂ தஶா।
தீ஑ஂ ஓ஑ ஓஙாநிஙே ஬஻௅஑தெ ஹ௃த஫ிதஂ ஫௃ஹூதா॥

ரத்னைஃ கல்பிதம் ஆஸநம் ஹிமஜலைஃ ஸ்நாநம் ச திவ்யாம்பரம்
நாநாரத்ன விபூஷிதம் ம்ருகமதா மோதாந்விதம் சந்தநம்
ஜாதீ சம்பக பில்வ பத்ர ரசிதம் புஷ்பம் ச தூபம் ததா
தீபம் தேவ தயாநிதே பசுபதே ஹ்ருத் கல்பிதம் க்ருஹ்யதாம்.

**பொருள்:** ***கருணைக் கடலே நவரத்தினங்களாலான ஆசனமும் பன்னீரால் அபிஷேகமும் பட்டாடைகளும் பலவகை இரத்தினாபரணங்களும் கஸ்தூரியின் நறுமணங்கலந்த சந்தனமும் வில்வ பத்திரத்தோடு ஜாதி, சம்பக மலர்களும் தூபமும் தீபங்களுமாகிய இவை (என்) இதயத்தால் கற்பிக்கப்பட்டவை. தேவனே, பசுபதியே, இவற்றை ஏற்றருள்வாயாக.***

஽ஐ஑஫ெ நவரத்ந ஬ிதெ ஬ாதெ ஬௃தஂ ஬ாஙஸஂ।
ஹக்ஷ்யஂ ஬ஞ்஬ிதஂ ஬஫ோ ததி ஙுதஂ ஦ஂஹாஹலஂ ஬ாநகஂ
஻ாகாநாஂ அஙுதஂ ஜலஂ ஦ு஬ிகஂ க஦்஬ூ஦ ஬஡்டோஜ்வலஂ॥
தாஂ஬ூலஂ ஊநஸா அயா வி஦஬ிதஂ ஹக்த்யா ஬்஦ஹோ ஸ்வீக஦ு॥

ஸௌவர்ணே நவரத்ந ரசிதே பாத்ரே க்ருதம் பாயசம்
பக்ஷ்யம் பஞ்சவிதம் பயோ ததி யுதம் ரம்பாபலம் பாநகம்
சாகாநாம் அயுதம் ஜலம் ருசிகரம் கர்ப்பூர கண்டோஜ்வலம்
தாம்பூலம் மநஸா மயா விரசிதம் பக்த்யா ப்ரபோ ஸ்வீகுரு.

**பொருள்:** ***பிரபுவே, நவரத்தினங்கள் பதித்த பொற்பாத்திரத்திலே பசுநெய்யும் பாயசமும் பால் தயிர் கலந்த ஐவகைப் பட்சணங்களும் வாழைக் கனியும் பாநகமும் பத்தாயிரம் கறிவகையும் சுவைமிக்க தண்ணீரும் பச்சைக் கர்ப்பூரத் துகளோடு விளங்கும் தாம்பூலமும் என்னால் பக்தியோடு மனத்தால் கற்பிக்கப்பட்டன. இவற்றை ஏற்றருள்வாயாக.***

*ஐவகைப் பட்சணங்கள்: உண்பன, தின்பன, கொறிப்பன, நக்குவன, பருகுவன.*

*பத்தாயிரம் எனும் கருத்துடைய அயுதம் எனும் சொல் எண்ணிக்கையற்ற, நிறைந்த என்னும் பொருளில் வந்தது.*

***஛த்ரஂ சாமரயோர்யுகம் வ்யஜநகஂ சாதர்஻கஂ நிர்மலஂ
வீணா ஹேரி ம்ருதங்க காஹலகலா கீதஂ ச ந்ருத்யஂ ததா।***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாஷ்டாங்கம் ப்ரணதிஃ ஸ்துதிபிர் பஹுவிதா ஹ்யேதத் ஸமஸ்தம் மயா
ஸங்கல்ப்பேந ஸமர்ப்பிதம் தவ விபோ பூஜாம் க்ருஹாண ப்ரபோ॥

சத்ரம் சாமரையோர் யுகம் வ்யஜநகம் சாதர்சகம் நிர்மலம்
வீணா பேரி ம்ருதங்க காஹள கலா கீதம் ச ந்ருத்யம் ததா
ஸாஷ்டாங்கம் ப்ரணதிஸ் ஸ்துதிபிர் பஹுவிதா ஹ்யேதத் ஸமஸ்தம் மயா
ஸங்கல்ப்பேந ஸமர்ப்பிதம் தவ விபோ பூஜாம் க்ருஹாண ப்ரபோ.

**பொருள்:** *என்றுமுள்ளாய், குடையும் இரட்டைச் சாமரையும் விசிறியும் தூய கண்ணாடியும் வீணை, பேரிகை, மிருதங்கம், எக்காளமென்னும் வாத்திய விருந்தமும் கீதமும் நடனமும் அஷ்டாங்க நமஸ்காரமும் பலவிதத் துதிகளும் ஆகிய இவையெல்லாம் கற்பனையாய் என்னால் உனக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. பிரபுவே இப்பூஜையை ஏற்றுக்கொள்வாய்.*

ஆத்மா த்வம் கிரிஜா மதிஃ ஸஹசராஃ ப்ராணாஃ சரீரம் க்ருஹம்
பூஜா தே விஷயோபபோகரசநா நித்ரா ஸமாதிஸ்திதிஃ
ஸஞ்சாரஃ பதயோஃ ப்ரதக்ஷிணவிதிஃ ஸ்தோத்ராணி ஸர்வா கிரஃ
யத்யத் கர்ம கரோமி தத்தத் அகிலம் சம்போ தவாராதநம்॥

ஆத்மாத்வம் கிரிஜா மதிஃ ஸஹசராஃ ப்ராணாஃ சரீரம் க்ருஹம்
பூஜா தே விஷயோப போக ரசனா நித்ரா ஸமாதி ஸ்திதிஃ
ஸஞ்சார பதயோ ப்ரதக்ஷிணவிதி ஸ்தோத்ராணி ஸர்வா கிரஃ
யத்யத் கர்ம கரோமி தத்தத் அகிலம் சம்போ தவாராதனம்.

பொருள்: *என் ஆத்மா தான் நீ. என் புத்தியே பார்வதி தேவி. பஞ்சப் பிராணன்களே பரிசாரகர்கள். என் உடம்பே ஆலயம். உலக இன்பானுபவச் செயல்களே உனக்குப் பூஜை. நான் செய்யும் துயிலே யோக சமாதி நிலை. என் கால்களின் நடமாட்டமே உன்னை வலம்வரல். என் பேச்செல்லாமே உனது துதிகள். என்னென்ன செயலைச் செய்கின்றோமோ அவை முழுவதும் சம்புவே, உனக்கான பூஜையாகும்.*

கரசரண க்ருதம் வாக்காயஜம் கர்மஜம் வா
ச்ரவண நயநஜம் வா மாநஸம் வாபராதம்।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌅𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌏𑌤𑌤𑍍 𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵
𑌜𑌯 𑌜𑌯 𑌕𑌰𑍁𑌣𑌾𑌬𑍍𑌧𑍇 𑌶𑍍𑌰𑍀 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌶𑌮𑍍𑌭𑍋॥

கர சரண க்ருதம் வாக் காயஜம் கர்மஜம் வா
ஸ்ரவண நயநஜம் வா மாநசம் வாபராதம்
விஹிதம் அவிஹிதம் வா ஸர்வம் ஏதத் க்ஷமஸ்வ
ஜய ஜய கருணாப்தே ஸ்ரீ மஹாதேவ சம்போ.

*பொருள்: கருணைக் கடலே கை, கால்களால் செய்யப்பட்டதும் வாக்கிலும் காயத்திலும் தோன்றியதும் செயலிலிருந்துண்டானதும் காதுகள் கண்களில் தோன்றியதும் மனத்தில் தோன்றியதும் விதிக்கப்பட்டதும் விதிக்கப்படாததும் ஆகிய இத் தவறுகளையெல்லாம் பொறுத்தருள்செய்வாய் ஸ்ரீ மஹாதேவனே, சம்புவே, வெல்க, வெல்க.*

*புறப்பூஜையிலே நாம் செய்கின்ற சகல உபசாரங்களையும் வரிசைக் கிரமமாகக் குறிப்பிட்டு அவற்றை இறைவனுக்கு வழங்குவதாக மானசீக பாவனையிலேயே பிரார்த்தனை செய்கின்ற இத்துதியிலே காணப்படும் பக்தியும் கவிச் சிறப்பும் சுவைத்தின்புறத் தக்கவை.*

மலேசியா - கோலாலம்பூர் கந்தசாமி கோவில் சிவாசாரியாராக விளங்கும் மட்டுவில் சமஸ்கிருத பண்டிதர் சிக்ஷாநிபுண கி. சதாசிவக்குருக்கள் அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவ்வமயம் அவர் தமது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை மிக அமைதியான முறையில் ஆன்மீக வைபவமாகக் கொண்டாடினார்.

அவரையும் குடும்பத்தவர்களையும் வாழ்த்துவதில் விவிதவித்யா பெருமையடைகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்ஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள்

(4)



பிரம்மஸ்ரீ தி.குமார சதாசிவசர்மா, நீரவேலி.

(இக்கட்டுரையாசிரியர், முகாந்திரம் சதாசிவ ஐயர் அவர்களின் வழித்தோன்றல்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.)

## வட பெருமபாக வித்தியாதரிசி

### முகாந்திரம்

## பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர்

*(1882 - 1950)*

யாழ்ப்பாணத்திலே பிறந்த தமிழ், வடமொழி அறிஞர்களிலே முகாந்திரம் தி. சதாசிவஐயரும் ஒருவர். இவரும் பாரதியார் பிறந்த ஆண்டிலே பிறந்து இயன்றளவு தமிழ்ப்பணியாற்றி உள்ளார். இவர் தான் எழுதிய செந்தமிழ்ப் பயிற்சியும் தேர்ச்சியும் என்னும் பாடநூலில் மகாகவி பாரதியாரைப் பற்றிக் குறிப்பிட்டடுள்ளார்.

1882 இல் பிறந்து 1950 இல் அமரர் ஆன அவரை தமிழ் இலக்கிய உலகம் இலகுவில் மறந்துவிட முடியாது. ஐங்குறுநூறு, கரவை வேலன் கோவை முதலிய நூலைப் பதிப்பிப்பதில் முன்னின்றார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட கரவை வேலன் கோவை அவர்களின் பரீட்சைக்குரிய நூலாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் அடுத்த பதிப்பு மட்டக்களப்பு வசந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்திரட்டு ஆகும். 1940 இல் வெளிவந்த இந்நூலில் நாட்டார் பாடல்கள் ஆய்வும் தொகுப்பும் செய்யபட்டிருப்பது இவரின் ஆளுமையை அறிய உதவுகின்றது.

சதாசிவ ஐயரின் பன்முகப்பட்ட பணியில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியது அவர் முன்னின்று நிறுவிய ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கமும் சுன்னாகம் பிராசீன பாடசாலையும் எனலாம். தமிழிலும் வடமொழியிலும் வல்லுநரான இவர் இவ்விரு நிறுவனங்கள் மூலம் இவ்விரு மொழிப் புலமையையும் இரசனையையும் வளர்க்க வழிகோலினார். அவர் வகித்த பதவி இந் நிறுவனங்களுக்கு உதவி, நன் கொடை பெற உதவின. யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1921 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக சதாசிவ ஐயர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்து சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டு 22-09-1882 முதல் 27-11-1950 வரை வாழ்ந்த பெரியார் இவர். இவர் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுக் கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் F.A. பரீட்சையில் விசேட சித்தி பெற்றார். 1910 ஆம் ஆண்டில் வித்தியாதரிசியானார்.

சுன்னாகம் பிராசீன பாடசாலை 1920 ஆம் ஆண்டில் இவரது அரிய முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆரியம், திராவிடம் இரு மொழிகளும் கற்றுக் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. வட மொழியைக் கற்பிப்பதற்கு இந்தியாவில் பாலைக்காட்டிலிருந்து வேதவிசாரதர் பிரம்மஸ்ரீ சிதம்பரசாஸ்திரியவர்களும், தமிழ் மொழிக்கு வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையரும் நியமிக்கப்பட்டனர். ஈழத்தில் பல பாகங்களில் இருந்தும் இங்கு மாணவர்கள் வந்து சமஸ்கிருதத்தையும் தமிழையும் கற்றனர். இங்கு வடமொழியைக் கற்ற எத்தனையோ சிவாச்சார்யர்களை இன்றும் காணலாம்.

இவர் **கலாநிதி** என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். ஆசிரியர்களுக்கென **ஆசிரிய போதினி** என்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையையும் நடத்தினார். இவரின் பணிகளில் அவர் யாத்த செய்யுள் நூல்களையும் அடக்குதல் வேண்டும். மரபுரீதியான யாப்புக்களையே கையாண்டு மரபு ரீதியான இலக்கிய வடிவங்களையே ஆக்கியுள்ளார்.

இவர் மேலும் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அளவெட்டி பெருமாக்கடவை சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை, இருது சங்கார காவியம், தேவி மானச பூஜையந்தாதி, கதிர்காம மும்மணி மாலை, சமாளதண்டக் கலிவெண்பா, நவரத்தினமாலை, என்பன குறிப்பிடத்தக்கன. மேகதூதத்தை இவர் மொழிபெயர்த்தெழுதி வைத்துள்ளார்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் எழுத்தாளர் கனக. செந்திநாதன் அவர்கள் சதாசிவ ஐயரைப்பற்றிப் பெருமையாகக் குறிப்பிடுகிறார். ஈழகேசரி வெள்ளிவிழா மலரிலும் சதாசிவ ஐயரைப் புகழ்ந்து சங்கம் வளர்த்த பெரியார் எனக் குறிப்பிடப்படுகிறது.

பதிப்பு முயற்சிகள் பத்திரிகைத்துறை, பாடப்புத்தகங்கள், கல்வி நிறுவனங்கள், செய்யுள் நூல்கள், மொழி பெயர்ப்புக் கட்டுரைகள், சொற்பொழிவுகள் என்று பல்வேறு துறையிலும் ஈடுபட்டுழைத்த தி. சதாசிவ ஐயர் அவர்களை நினைவு கூருவது பொருத்தமானதாகும்.





பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற
சுன்னாகம் பிராசீன பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவித வித்யாவை வளர்க்கும் வித்யார்த்திகள்

நாம் வேண்டிக்கொண்டதற்கிணங்க அநேக அன்பர்கள் விவிதவித்யாவின் தொடர்ச்சியான வெளியீட்டிற்கு உதவும்வண்ணம் நிதியுதவிகளை வழங்கிவருகிறார்கள். வெளிநாடுகளிலும் விவிதவித்யாவைப் பலர் ஆவலுடன் வரவேற்கின்றனர்.

**ஆண்டுச் சந்தா ரூபா 100.00** (நான்கு இதழ்களிற்கு) என்பதற்கிணங்க, ஓராண்டுச் சந்தா முதல் ஐந்தாண்டுச் சந்தா வரை வழங்கியுள்ளனர் சிலர்.

**ஆயுள் சந்தா ரூபா 1000.00** வழங்கியுள்ளனர் சிலர்.

அதற்குமேல் **அன்பளிப்பு** என்றவகையில் அதிக நிதியை அள்ளி வழங்கியுள்ளனர் இன்னும் சிலர்.

இம் மூவகையிலும் ஆதரவு வழங்கியவர்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது.

*ஆரம்பத்திலேயே சந்தாக்களை வழங்கியவர்கள் சிலரின் பெயர் விபரங்கள் தவறிவிட்டன என்பதை உணருகிறோம். சந்தா செலுத்தியும் பெயர்விபரம் வெளியிடப்படாதவர்களும் இதழ் கிடைக்கப் பெறாதவர்களும் தயவுசெய்து எம்மை மன்னித்து எம்முடன் தொடர்புகொண்டு விபரங்களை அறியத்தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.*

## 1. அள்ளித் தரும் அரியவர்கள்

1. பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், நகுலேஸ்வரம், கீரிமலை.
2. பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள், வாய்க்காற்றரவைவிநாயகர் தேவஸ்தானம், நீர்வேலி.
3. பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா, பிரான்ஸ்.
4. பிரம்மஸ்ரீ சா. சிவபால சர்மா, ஜெர்மனி.
5. பிரம்மஸ்ரீ வை. ஸ்ரீமசுந்தரக் குருக்கள் லூசியம் சிவன் கோவில், லண்டன்.
6. பிரம்மஸ்ரீ பா. ராமச்சந்திரக் குருக்கள், லண்டன்.
7. பிரம்மஸ்ரீ உ. ஆதித்தக் குருக்கள், வோல்தம்ஸ்ரோ பிள்ளையார் கோவில், லண்டன்.
8. பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்கள்,வோல்தம்ஸ்ரோ பிள்ளையார் கோவில், லண்டன்.
9. பிரம்மஸ்ரீ ப. பாலச்சந்திரக் குருக்கள், வோல்தம்ஸ்ரோ பிள்ளையார் கோவில், லண்டன்.
10. பிரம்மஸ்ரீ கு. ஆரூரக் குருக்கள், கனகதுர்க்கையம்மன் கோவில், லண்டன்.
11. பிரம்மஸ்ரீ ச. கமலநாதக் குருக்கள், நாகபூஷணி அம்மன் கோவில், லண்டன்.
12. பிரம்மஸ்ரீ வ. திவாகரக் குருக்கள், நாகபூஷணி அம்மன் கோவில், லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரம்மஸ்ரீ இ. வேதரூபக் குருக்கள், வெம்பிளி, லண்டன்.
14. பிரம்மஸ்ரீ முரளீதரக் குருக்கள், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
15. பிரம்மஸ்ரீ க. மூர்த்திக் குருக்கள், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
16. பிரம்மஸ்ரீ கே. சிவ சண்முக சர்மா, ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
17. பிரம்மஸ்ரீ டி. சிவப்பிரகாசம், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
18. பிரம்மஸ்ரீ ப. சோமசுந்தரக் குருக்கள், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
19. பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
20. பிரம்மஸ்ரீ கோகுலநாதக் குருக்கள், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்.லண்டன்
21. பிரம்மஸ்ரீ எஸ். சுரேஸ்வரக் குருக்கள், ஸ்ரோன்லி ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில், லண்டன்.
22. பிரம்மஸ்ரீ செ. ரவிச்சந்திரக் குருக்கள், ஸ்ரோன்லி ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில், லண்டன்.
23. முல்லை அமுதன், லண்டன்.
24. திருமதி மாதவி சிவலீலன், லண்டன்.

## 2. ஆயுள் சந்தா அளிக்கும் ஆதரவாளர்கள்

1. பிரம்மஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி.
2. பிரம்மஸ்ரீ மு. பாலகுருசாமிசர்மா, குடியிருப்பு, சுழிபுரம்.
3. மஹாராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக் குருக்கள், மாவை ஆதீனம், மாவிட்டபுரம்.
4. பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள், நவாலி.
5. பிரம்மஸ்ரீ அ. துரைச்சாமிக்குருக்கள், மாவிட்டபுரம்.
6. பிரம்மஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள், தர்மாசாஸ்தா குருகுலம், இணுவில்.
7. பிரம்மஸ்ரீ விஸ்வ. நாராயண சர்மா, கொழும்பு.
8. பிரம்மஸ்ரீ கை. வாமதேவக் குருக்கள், நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினை.
9. பிரம்மஸ்ரீ தி. முருகானந்தக் குருக்கள், கனடா
10. பிரம்மஸ்ரீ ப. விஜயகுமாரக் குருக்கள், கனடா
11. பிரம்மஸ்ரீ சோ. வரதராஜசர்மா, கொழும்புத்துறை.
12. பிரம்மஸ்ரீ சு. முரளீதரக் குருக்கள், அரியாலை.
13. பிரம்மஸ்ரீ வை.ஆர். பாலச்சந்திரக் குருக்கள், கந்தசாமி கோவில், குளியாப்பிட்டி.
14. பிரம்மஸ்ரீ எஸ். சாந்தமூர்த்திக் குருக்கள், கண்ணகியம்மன்கோவில்,ஊற்றங்கரை,திருமலை.
15. பிரம்மஸ்ரீ கை. சிவசங்கர சர்மா, வைரவர் கோவில்,பாலையூற்று,திருகோணமலை.
16. பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா, இணுவில் கிழக்கு, இணுவில்.
17. பிரம்மஸ்ரீ ந. அபராஜிதக் குருக்கள், கந்தசாமி கோவில், இணுவில்.
18. பிரம்மஸ்ரீ ந. இராஜாராம் குருக்கள், வவுனியா.
19. பிரம்மஸ்ரீ சா. ஜெயச்சந்திர பைரவமூர்த்திக் குருக்கள், சுதுமலை, மானிப்பாய்.
20. பிரம்மஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள், இளவாலை.
21. பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள், பொன்னாலை.
22. பிரம்மஸ்ரீ வே. நடராஜக் குருக்கள், சிவன் தேவஸ்தானம், ஆவரங்கால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. பிரம்மஸ்ரீ ச. நாராயணக் குருக்கள், புத்தூர்.
24. பிரம்மஸ்ரீ இ. சுவாமிநாதக் குருக்கள், கந்தசுவாமி தேவஸ்தானம், நீர்வேலி.
25. பிரம்மஸ்ரீ எஸ். வைத்தியநாதக் குருக்கள், கந்தவனக் கடவை, பொலிகண்டி.
26. பிரம்மஸ்ரீ சபேசக் குருக்கள், 115 117, 7ம் ஒழுங்கை, தெஹிவளை.
27. பிரம்மஸ்ரீ க. ஈஸ்வர சர்மா, விஷ்ணு கோவில், தெஹிவளை.
28. பிரம்மஸ்ரீ பா. கோபாலகிருஷ்ணக் குருக்கள், 111, Mayfield Road, கொழும்பு.
29. பிரம்மஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள், மணற்காடு முத்துமாரியம்மன் கோவில்,காரைநகர்.
30. பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மா, (புன்னாலைக் கட்டுவன்) டென்மார்க்.
31. பிரம்மஸ்ரீ ச. சண்முக ராஜேஸ்வரக் குருக்கள், பிள்ளையார் கோவில், கோப்பாய்
32. பிரம்மஸ்ரீ எஸ். மாதவசர்மா, ஞானபைரவர் வீதி, திருகோணமலை.

## 3. இயல்பாக ஆண்டுச் சந்தா நல்கும் இனியவர்கள்

1. பிரம்மஸ்ரீ சி. ஸ்ரீதரசர்மா, இணுவில்.
2. வைத்திய அதிகாரி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மா, வல்வெட்டித்துறை.
3. பிரம்மஸ்ரீ ச. சிவசாமிக் குருக்கள், வில்லூன்றி, யாழ்ப்பாணம்.
4. பிரம்மஸ்ரீ க. ஸ்ரீநிவாசன், மயிலணி, சுன்னாகம்.
5. பிரம்மஸ்ரீ சி. சிவ சரவணபவன், கந்தரோடை, சுன்னாகம்.
6. பிரம்மஸ்ரீ சாமி. சோமசுந்தரக் குருக்கள், சிவன்கோவில், புத்தூர்.
7. பிரம்மஸ்ரீ பா. ஆனந்தக் குருக்கள், சிவன் கோவிலடி, புத்தூர்.
8. பிரம்மஸ்ரீ க. லக்ஷ்மண சர்மா, இலங்கை வங்கி, திருநெல்வேலி.
9. பிரம்மஸ்ரீ என். ஸ்ரீதரசர்மா, 40/40, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
10. பிரம்மஸ்ரீ எஸ் ரஜதகிரீசக் குருக்கள், மயிலணி, சுன்னாகம்.
11. பிரம்மஸ்ரீ சோ. சுசீந்திரராஜசர்மா, கந்தசாமி கோவிலடி, கோப்பாய்.
12. பிரம்மஸ்ரீ பூ. கீதச்சந்திரக் குருக்கள், கந்தசாமி கோவில், கோப்பாய்.
13. பிரம்மஸ்ரீ ச. பசுபதீஸ்வர சர்மா, பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்.
14. பிரம்மஸ்ரீ ச. செம்பொற் சோதீஸ்வர சர்மா, பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்.
15. பிரம்மஸ்ரீ ச. கந்தராஜேஸ்வர சர்மா, பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்.
16. பிரம்மஸ்ரீ இ. சண்முகானந்தக் குருக்கள், சிவானந்த இல்லம் பிள்ளையார் கோவிலடி, பன்னாலை, தெல்லிப்பளை.
17. பிரம்மஸ்ரீ பா. கணேச சர்மா நயினை
18. பிரம்மஸ்ரீ எஸ். வேதாரண்யேஸ்வர சர்மா, வேம்படிக் கந்தசாமிகோவில், மட்டுவில்.
19. பிரம்மஸ்ரீ தி. உமாசுத சர்மா, மூளாய், சுழிபுரம்.
20. பிரம்மஸ்ரீ விக்னேஸ்வரக் குருக்கள், சிவன் கோவிலடி, திருகோணமலை.
21. பிரம்மஸ்ரீ ச. பாஸ்கரக் குருக்கள், முத்துமாரி அம்மன் கோவில், வத்தேகம.
22. பிரம்மஸ்ரீ க. சுதர்சனக் குருக்கள், ஆவரங்கால்.
23. பிரம்மஸ்ரீ பா. இந்திர சர்மா, 135, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பிரம்மஸ்ரீ க. தியாகராஜக் குருக்கள் (நீர்வை மணி) செல்லக்கதிர்காமசாமிகோவில், நீர்வேலி.
25. பிரம்மஸ்ரீ சோமசபேசக் குருக்கள், சிவகாமி அம்மன் கோவில், இணுவில்.
26. பிரம்மஸ்ரீ வே. தியாகராச சர்மா, ஆவரங்கால், புத்தூர்.
27. பிரம்மஸ்ரீ சண். ரவிச்சந்திரக் குருக்கள் முத்துமாரி அம்மக் கோவில், மன்னார் வீதி, புத்தளம்.
28. பிரம்மஸ்ரீ எஸ். வைத்தீஸ்வரக் குருக்கள், முத்துமாரி அம்மக் கோவில், மன்னார் வீதி, புத்தளம்.
29. பிரம்மஸ்ரீ மு. ஸ்கந்த சபேச சர்மா, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
30. பிரம்மஸ்ரீ க. கேதீஸ்வரக் குருக்கள், வீரபத்திரர் கோவில், உடுப்பிட்டி.
31. பிரம்மஸ்ரீ தேவராஜக் குருக்கள், அல்வாய் கிழக்கு, அல்வாய்.
32. பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள், ஆசிமட அரசடி விநாயகர் கோவில், கோண்டாவில்.
33. பிரம்மஸ்ரீ யோ. பிரபாகரக் குருக்கள், அத்தியடிப் பிள்ளையார் கோவில், யாழ்ப்பாணம்.
34. பிரம்மஸ்ரீ சு. நவநீத சர்மா,கடைச்சாமி கோவிலடி, யாழ்ப்பாணம்.
35. பிரம்மஸ்ரீ செ. நகுலேஸ்வர சர்மா, நீராவியடி, யாழ்ப்பாணம்.
36. பிரம்மஸ்ரீ எஸ். மயூரன், மஞ்சவனப்பதி, கொக்குவில்.
37. பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர், காணிப் பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்.
38. பிரம்மஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள், சிவன் கோவில், சித்தன்கேணி.
39. பிரம்மஸ்ரீ தி. ஜோதிநாதக் குருக்கள், சிவபூதராயர் கோவில், கோண்டாவில்.
40. பிரம்மஸ்ரீ தி. விக்னேஸ்வரநாத சர்மா, 60F, Ratnam Rd. Colombo - 13.
41. பிரம்மஸ்ரீ நா. சிவசங்கர சர்மா, முத்துமாரி அம்மன் கோவில், மயிலணி, சுன்னாகம்.
42. பிரம்மஸ்ரீ கு. சிவகுமார சர்மா , ஆசிரியர், மயிலணி, சுன்னாகம்.
43. பிரம்மஸ்ரீ சோ. சந்திரசேகர சர்மா, சிவன்கோவில், மயிலணி, சுன்னாகம்.
44. பிரம்மஸ்ரீ சா. குமரேச சர்மா, தாவடி, கொக்குவில்.
45. பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ணக் குருக்கள், மூத்தவிநாயகர் கோவில், கச்சேரி வீதி, நல்லூர்.
46. பிரம்மஸ்ரீ கு. சசிகுமார சர்மா, சட்டநாதர் கோவிலடி, நல்லூர்.
47. பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா, சிவன் கோவில், நல்லூர்.
48. பிரம்மஸ்ரீ ச. பத்மநாப சர்மா, செட்டித்தெரு, நல்லூர்.
49. பிரம்மஸ்ரீ சு. லகுதர சர்மா, மடம் ஒழுங்கை, கல்வியங்காடு.
50. பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
51. பிரம்மஸ்ரீ சா. சோமாஸ்கந்தக் குருக்கள்,ஸ்ரீதேவி வில்லிசை, கொழும்பு.
52. பிரம்மஸ்ரீ கருணானந்த சர்மா, 2ம் ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
53. பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரசர்மா, ஆனைக்கோட்டை.
54. பிரம்மஸ்ரீ உமாசுதன் குருக்கள்
55. பிரம்மஸ்ரீ என். ஸ்ரீகாந்த சர்மா, டென்மார்க்.
56. திரு. எஸ். வாகீசன், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் பிரம்மஸ்ரீ ச.ப. சர்மாவுடன் ஒரு நேர்காணல்



## ஆரிய திரவிட பாஷாபிவிருத்திச் சங்கம் பற்றியது.

*சுமார் பத்து வருடத்துக்கு முந்திய இந்த நேர்காணல்
இதுவரை எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமாகவில்லை.*

**செவ்வி கண்டவர்:
ஒரு பல்கலைக்கழக மாணவர்.**

*1. தமிழ்ப்பண்டிதர்களை உருவாக்குகின்ற இந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?*

கூறுகிறேன். ஆரியம், திராவிடம் என்பன வடமொழியையும் தமிழ்மொழியையும் குறிக்கும் சொற்கள். இவற்றை வளர்க்கும் சங்கம் என்ற பொருளில், சங்கத்தின் நோக்கத்தை வெளிப்படுத்து வதற்காக, இப்படியான நீண்ட பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் இதனை நிறுவியவர்கள். என்றாலும் கீழ்நாட்டு மொழியாய்வுக் கழகம் என்று பொருளுடைய Jaffna Oriental Studieng Society என்று ஆங்கிலத்திலும் பெயர் வைத்து J. O. S. S. என்று சுருக்கி வழங்கினார்கள்.

ஆரியம் திராவிடம் என்ற இந்த இரண்டு மொழிகளும் மிகப் பழைய பண்பாட்டு மொழிகள். நெடுங்காலமாக ஒன்றோ டொன்று கலந்துறவாடிக் 'கொண்டும் கொடுத்தும்' வளர்ந்து வந்தவை. உயர்ந்த இலக்கிய இலக்கணங்களையும் தத்துவ சித்தாந்தங்களையும் உடையவை. புதுமை மயக்கத்தால் இவற்றை நாம் இழந்து விடக் கூடாதென்றுதான் அக்காலத்திலிருந்த அறிஞர்கள் இந்தச் சங்கத்தை நிறுவி வளர்த்தார்கள். பழமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலிருந்துதான் புதுமை தோன்றவேண்டுமென்று அவர்கள் கருதியதால் 'தொன்மை மறவேல்' என்னும் ஔவை வாக்கைச் சங்கத்தின் நோக்கு மொழியாகத் தெரிந்தெடுத்தார்கள். தொடக்க காலத்திலிருந்தே இரு மொழிகளிலும் தனித்தனியே பிரவேச, பாலபண்டித, பண்டித பரீட்சைகளை நடத்தி மொழி வளர்த்து வருகிறது சங்கம்.

## 2. இந்த அமைப்பு நிறுவப்பட்ட காலம், இதனை நிறுவியவர்கள், பங்கேற்று வளர்த்தவர்கள் பற்றியும் சொல்லுங்கள்

இந்தச் சங்கம் 1922 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அக்காலத்தில் இங்கே வட பெரும்பாகத் தமிழ் வித்தியாதரிசி என்ற பதவியிலிருந்த சதாசிவ ஐயர் என்ற கல்வி அதிகாரியே இதை நிறுவி வளர்த்த பெருமைக்குரியவர். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரான இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றுப் பல நூல்களும் இயற்றியவர். இவர் கொழும்பில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சுவாமி விபுலாநந்தரோடு ஒரு சாலை மாணவரா யிருந்தவர். விஞ்ஞானப் பட்டதாரியான விபுலாநந்தர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிலும் தேறி ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பண்டிதர் என்ற சிறப்புடன் யாழ்ப்பாணத்தில் ஆசிரியப்பணியாற்ற வந்தார். அப்போதுதான் அவருடைய ஒத்துழைப்போடு சதாசிவ ஐயர் இச் சங்கத்தை நிறுவினார். முதலில் வித்துவான் கணேசையர், த. கைலாயபிள்ளை, நவநீத கிருஷ்ண பாரதியார், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்னும் தமிழறிஞர்களும் வரலாற்றறிஞரான முதலியார் இராசநாயகம், தெல்லிப்பழை துரையப்பாபிள்ளை, சபாரத்தின சிங்கம், எம். எஸ். இராசரத்தினம், கா. அருளம்பலம், கல்வியதிகாரி கந்தையா, முதலிய பிரமுகர்களும் சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்கள். பின்பு வித்துவான் சுப்பையா பிள்ளை, பண்டிதர் மகாலிங்கசிவம், சு. நடேசபிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, Dr. சிவப்பிரகாசம், ஆசிரிய கலாசாலைகளில் அதிபர்களாயிருந்த அ. பொன்னையா, ஷண்முகரத்னம், கி. சுவாமிநாதன், கந்தசாமி, கலைப்புலவர் நவரத்தினம், அம்பிகைபாகன் முதலியவர்கள் சங்கத்தின் ஆட்சிக்குழுவிலிருந்து பணியாற்றியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பாடத்திட்டத்தையும் பரீட்சை முறைகளையும் பின்பற்றியே இங்கும் பரீட்சை நடத்தப்பட்டது. ஈழத்துத் தமிழறிஞர்களோடு தமிழகத்து அறிஞர்களும் பரீட்சகர்களாயிருந்தனர்.

சதாசிவஐயர் சுன்னாகத்தில் காணி வாங்கிக் கட்டிடங்கள் கட்டுவித்துப் பிராசீன பாடசாலை என்ற பெயரில் இருமொழிக் கல்லூரியொன்றையும் முன்பே நிறுவியிருந்தார். மகாவித்துவான் கணேசையர் அதன் தலைவராயிருந்தார். விடுதிகளிலும் சில மாணவர் தங்கியிருந்து கல்வி கற்றனர். சங்க வரலாற்றில் அது ஒரு பொற்காலம் என்று கூறலாம்.

## 3. தொடக்ககாலத்திலிருந்து இச்சங்கத்தின் வளர்ச்சிப் போக்கு எப்படி இருந்தது? இப்போது எப்படியிருக்கிறது?

இந்தச் சங்கத்துக்குத் தலைவரும் செயலாளரும் சங்க உறுப்பினரால் தெரிவு செய்யப்படுவதில்லை. கல்வித் திணைக் களத்தின் பதவி வழியாக அவர்கள் வருவார்கள். தமிழார்வமும் கடமையுணர்ச்சியுமுள்ளோர் பதவிக்கு வரும்போது சங்கத்தின் செயற்பாடு சிறப்பாயிருக்கும். வேறுவிதமானவர் வரும்போது சங்கக் கூட்டங்களும் பரீட்சைகளும் கூட நடவாமலே காலம் போய்க்கொண்டிருக்கும். முன்பு சதாசிவ ஐயர் காலத்திலும் இடையில் சரவண முத்து என்னும் வித்தியாதரிசியின் காலத்திலும் விழாக்களும், நூல் வெளியீடு, பத்திரிகை வெளியீடுகளும் நடந்தன. ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் சிலகாலம் சோர்வு நிலை இருந்தது. அதற்குப் பின்பு முன்னேற்றம் ஏற்பட்டு இப்போது இரண்டாண்டு களாகச் சங்கத்தின் செயற்பாட்டில் சிறப்பான மாற்றங்கள் தெரிகின்றன.

## 4. இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் இந்த நிறுவனம் எந்த வழியில் முக்கியமானது? இதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு எத்தகையது?

விடுதலைப் போராட்டம் நடக்கும் போதே மாணவரின் கல்விப் பயிற்சியும் நடப்பது போலவே, எங்கள் பண்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களைப் பாதுகாப்பதும், மண்மீட்கப்பட்டபின்பு வருகின்ற புதிய சமுதாயத்திடம் அவற்றை ஒப்படைப்பதும் இது போன்ற நிறுவனங்களின் கடமையாகையால், ஏனைய காலத்தை விடப் போராட்ட காலத்திலேதான் இதற்கு முக்கியத்துவம் அதிகம். இந்த உண்மையை உணர்ந்துதான் விடுதலைப்புலிகளியக்கம் கல்விமேம்பாட்டுப் பேரவையை அமைத்து ஈழமாணவரின் கல்வி வளர்ச்சியைக் கண்காணித்து வருகிறது.

சென்ற ஆண்டிலிருந்து இந்தச் சங்கத்துக்குக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பேராதரவு கிடைத்திருக்கிறது. பேரவையினரின் தூண்டுதலால்தான் கல்விக் கோட்டங்கள் தோறும் சங்க வகுப்புகளைத் தொடங்க முடிந்தது. வகுப்புகளின் தொடக்க நிகழ்ச்சிகளுக்கு கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவரும் செயலாளரும் பொறுப்பாளரும், சங்கத்தவர்களையும் அழைத்துச் சென்று ஊக்கமளிக்கிறார்கள். குறிப்பாகப் பேரவைப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தும் போது, சங்கவகுப்புக்களிற் கற்பிக்கும் தமிழறிஞர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படுமென்றும், பாடப் புத்தக நூலகமொன்று 24 மணிநேரமும் பயன்படக்கூடியதாய்த் திறக்கப்படுமென்றும் வாக்களித்திருப்பது, இதுவரை இலவசமாய்க் கற்பித்து வந்த ஆசிரியர்களுக்கும், பாடப்புத்தகமில்லாத மாணவர்களுக்கும் நம்பிக்கையூட்டியிருக்கிறது.

## 5. இந்த அமைப்பினால் நடத்தப்படுகின்ற வகுப்புக்கள் அவற்றுக்கான அநுமதிகள் பற்றிக் கூறுவீர்களா?

வகுப்புகள் ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் தொடங்கி நடக்கின்றன. மானிப்பாய், வட்டுக் கோட்டை, மருதனார்மடம், நல்லூர், பருத்தித்துறை, சாவக்கச்சேரி என்னும் இடங்களில் வாரநாட்களில் மாலை நேர வகுப்பாய் இவை நடத்தப்படுகின்றன. சாவகச்சேரியில் பண்டித வகுப்பும் தொடங்கியிருக்கிறது. மற்ற இடங்களில் பிரவேச பண்டித, பாலபண்டித வகுப்புகள் மாத்திரமே நடக்கின்றன.

தமிழ்ப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. சாதாரண தரத்தில் தேறியவர்கள் பிரவேச பண்டித வகுப்பில் அநுமதிக்கப்படுவார்கள். பிரவேச பண்டிதர்களும், க. பொ. த.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரத்தில் தமிழிற் சிறப்புடன் தேறியவர்களும், பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களும் பாலபண்டித வகுப்பிற் சேரலாம். பால பண்டிதர்களும் பல்கலைக்கழக இடைநிலைத் தேர்வில் தேறியோரும் கலைப்பட்டதாரிகளும் பண்டித வகுப்புக்குத் தகுதியுடையவர்கள்.

### 6. பரீட்சைப் பாடத்திட்டங்கள் பற்றியும் சிறிது கூறுங்கள்.?

இந்தப் பரீட்சைகளுக்குரிய பாடங்களெல்லாம் நான்கு வகைகளாக - தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இலக்கியங்கள் முதலாம் பாடவகையென்றும் இலக்கணம் இரண்டாம் பாடவகையென்றும், இலக்கிய வரலாறும், கட்டுரை எழுதுதல் முதலிய ஆக்க வேலைகளும் மூன்றாம் பாடவகை என்றும், தெரிவுப் பாடங்களும், துணைமொழிகளும் நான்காம் பாடவகையென்றும் வகுக்கப்பட்டிருக்கின்றன. முதல் மூன்று பாடவகையும் விதிவிலக்கின்றி எல்லோரும் எடுக்க வேண்டிய கட்டாய பாடங்கள். நான்காம் பாடவகையில் தாம் விரும்பிய பாடங்களை தெரிந்தெடுக்கும் வாய்ப்பு பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தெரிவுப்பாடங்களுள் நாட்டு வரலாறு, இந்து நாகரிகம், தருக்கசாத்திரம், இந்துசமயதத்துவம் முதலியவற்றுள் ஒன்றையும் ஆங்கிலம், வடமொழி என்பவற்றில் ஒன்றையும் தெரிந்தெடுக்க வேண்டும். பிரவேச பண்டித பரீட்சைக்கு ஐந்து வினாத்தாளும் ஏனைய இரண்டுக்கும் எட்டெட்டு வினாத்தாள்களுமுண்டு.

### 7. ஏன் பண்டிதர்களுக்குத் துணை மொழியறிவைக் கட்டாயப்படுத்துகிறீர்கள்?

பண்டிதர்களுக்கு மாத்திரமல்ல, படிப்பாளிகள் எல்லோருக்குமே பல மொழியறிவு பயன் தரத்தக்கது தானே. இன்றைய சமுதாய வாழ்வில் ஆங்கிலந் தெரியாதவன் பின்தங்க வேண்டியிருக்கிறது. தமிழிலக்கண இலக்கிய வரலாற்று ஆராச்சிகள்கூட, தமிழிலும் பார்க்க ஆங்கிலத்திலேதான் அதிகம் வெளிவருகின்றன. எங்கள் இலக்கியம் சமயம் கலைகளைச் சரியாக விளங்கிக் கொள்ளுவதற்கு வடமொழியறிவு தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேதான் பல்கலைக்கழகங்களும் வடமொழியறிவை வற்புறுத்துகின்றன. இப்படியாக இந்த இரண்டு மொழிகளும் பண்டிதர்களுக்குத் தேவையாயிருக்கிற நிலையில் இவற்றில் ஒன்றையாவது கற்கும்படி வற்புறுத்துவது நியாயமானதுதான். முன்பு விருப்பப்பாடமாயிருந்த மொழியறிவு கட்டாய பாடமாக்கப்பட்டதற்கு வேறொரு காரணமுமுண்டு. சிங்களப்பண்டிதர்களுக்குப் பட்டதாரிச் சம்பளம் கொடுப்பது போலத் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று சங்கம்வற்புறுத்தியபோது, “சிங்களப் பண்டிதர்கள் பல பாடங்களையும் பல மொழிகளையும் படிப்பிக்கின்றார்கள். தமிழ்ப் பண்டிதர்கள் இலக்கியம், இலக்கணம், சமயம், ஆகிய மூன்று பாடங்கள் தான் படிப்பிக்க முடியும்” என்று கூறி ஆட்சியாளர் இரண்டு பாடத்திட்டங்களையும் ஒப்பிட்டுக் காட்டிய பின்புதான் துணைமொழி கட்டாயமாக்கப்பட்டது.

*8. அப்படியானால் சங்கப் பாடத்திட்டத்தில் புதிய அறிவியற் பாடங்களையும் சேர்த்துக் கொள்வீர்களா?*

சேர்க்கலாம். கணிதம், விஞ்ஞானம், உளவியல், சமூகவியல் முதலிய பாடங்களைச் சேர்க்கும்படி முன்பு ஆலோசனை சொல்லப்பட்டதுமுண்டு. ஆனால், இந்தப் புதிய பாடங்களைப் பணங்கொடுத்து வருந்திக் கற்கும் மாணவர் தமிழைப் புறக்கணித்துவிடுகிறார்கள். ஆகையினாலேதான் மொழி இலக்கியங்களை இலவசமாகக் கற்பிக்க முயலுகிறோம்.

*9. பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களுக்கும் இந்தச் சங்கத்தின் பாடத்திட்டத்துக்கும் தொடர்புகளுண்டா?*

தொடர்புகளுண்டு. இலக்கிய பாடங்களில் தொடர்பு அதிகமுண்டு. இலக்கணத்தில் ஆழமான படிப்பை எதிர்பார்க்கிறோம். பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி முறையில் அகலப்படிப்பை கைக்கொள்ளுகிறார்கள். இரண்டு முறைகளும் இணைவது அவசியம். இதற்காகப் பல்கலைக்கழகப் பேராசிரியரைப் பண்டித வகுப்புகளுக்கு விரிவுரையாற்ற அழைத்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*10. பண்டிதர்கள் ஆராய்ச்சித்துறையில் ஈடுபடுவதில்லை என்று ஒரு குறை கூறப்படுகிறதே அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

இதில் ஓரளவு உண்மையுண்டு. பண்டிதர் பரீட்சை தேறியவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரையொன்று எழுதிச் சமர்ப்பிக்க அதைச் சங்கத்தினர் பரிசீலித்து ஏற்ற பின்புதான் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. சிறந்த வழிகாட்டலும் நூலக வசதியுமில்லாமையால் இவர்களுடைய ஆய்வுக்கட்டுரைகள் நூலுருவம் பெறத்தக்க தரத்தில் அமைவது குறைவு. மேலும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டிய தூண்டுதலோ தேவையோ அவர்களுக்கு ஏற்படாமையால் அவ்வளவில் அவர்கள் ஓய்ந்துவிடுகிறார்கள்.

*11. இந்தப் பரீட்சைகளை நடத்துவதைவிட வேறு என்ன பணிகளைச் சங்கம் செய்கிறது?*

இந்த உயர்தரத் தேர்வுகளோடு முன்பு க. பொ. த. சாதாரண தரத்தினருக்குத் தமிழிலும் சமயத்திலும் பயிற்சித் தேர்வுகளை நடத்திப் பரிசுகளும் சான்றிதழ்களும் சங்கம் வழங்கியது. இப்போது உயர்தரத்து மாணவர்களுக்குப் பயிற்சித் தேர்வுகளை நடத்துகிறது.

பரீட்சைப் பணியை விட, நூல் வெளியீட்டுப்பணியிலும் சங்கம் முன்பு ஈடுபட்டிருந்தது. ஐங்குறுநூறு, கரவை வேலன் கோவை, கனகராயன் பள்ளு, வெள்ளிவிழா மலர் என்னும் நூல்களையும் "கலாநிதி" என்ற மும்மாத இதழையும் வெளியிட்டது. மீண்டும் வெளியீட்டுத்துறையில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.



விவிதவித்யா ஸ்தாபகர் அமரர் பண்டிதர் ச.ப.சர்மா அவர்களின் கனிஷ்ட குமாரரான பிரம்மஸ்ரீ ப. சோமசேகர சர்மா அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதுளை மாவட்ட மேல்நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பிரபல சோதிடராக விளங்கும் இவர் பதுளையை வசிப்பிடமாகக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்ததும் தெரியாததும்

பிரம்மஸ்ரீ சோ. வரதராஜ சர்மா
கொழும்புத்துறை.

## குருவணக்கம்

ഗുരുർ ബ്രഹ്മാ ഗുരുർ വിഷ്ണുഃ ഗുരുർ ദേവോ മഹേശ്വരഃ।
ഗുരുഃ സാക്ഷാത് പരംബ്രഹ്മ തസ്മൈ ശ്രീ ഗുരവേ നമഃ॥

குரு பிரம்மாவாகவும் விஷ்ணுவாகவும் ஈஸ்வரனாகவும் பரப்பிரம்மமாகவும் இருக்கின்றார். அப்படிப்பட்ட குருவிற்கு நமஸ்காரம்.

அஜ்ஞான திமிராந்தஸ்ய ஜ்ஞானாஞ்ஜன ஶலாகயா।
சக்ஷுருன்மீலிதம் யேன தஸ்மை ஶ்ரீ குரவே நம:॥

அஜ்ஞானம் என்கின்ற இருட்டினால் குருடாக இருப்பவனுடைய கண்ணானது ஞானமென்கின்ற மை பூசுவதினால் பிரகாசம் ஏற்படும். எவரால் இது செய்யப்படுகிறதோ அந்தக் குருவிற்கு நமஸ்காரம்

## மணி அடித்தல்

ஆகமார்த்தம் து தேவானாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம்।
குர்வே கண்டாரவம் தத்ர தேவதாஹ்வான லாஞ்சனம்॥

தேவர்களை மணியின் நாதத்தினால் வரும்படி அழைக்கின்றோம். அதே நேரத்தில் இந்த மங்களகரமான நாதம் அசுரர்களையும் துஷ்டர்களையும் இங்கு வராமல் தடுக்கின்றது.

உபாவஸரா:-

ஸ்நானே ச தர்ப்பணே ச ஹோமே ச தர்பணே ச।
நைவேத்யே ச ஸ்தோத்ரே ச தீபே ச நீராஜனே।
ஸர்வகாலேஷு கார்யேஷு உபா வஸரேஷு தாடயேத்॥

*பெரியமணி :- அபிஷேக ஆரம்பம், அபிஷேக முடிவு, அர்ச்சனை முடிவு, நைவேத்தியத்தின் ஆரம்பம், உற்சவ ஆரம்பம், உற்சவ முடிவு, நர்த்தனத்தின் முடிவு இக்காலங்களில் பெரிய மணி அடிக்க வேண்டும். (ஸங்க்ரஹ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தநூவணா:-

கஷூணாதி க்ியாகாமெ கஉூாமஹவ௺ காமுகெ।
மணெம யஜநெ காமெ வூண௺ாமெமாவ கூ௨ெ தயா॥
வூண௺ாமெ யூவதீவெ வ வமி ஹ௨ணகாமுகெ।
வஞதஂ தாஉயெதுணாஂ ஸவூவிவுநிவாரிணீஂ।
வணாதாஉநஹீநஂயதூ௨ தநிஷூஂ ஹவெகு॥ (வூகெஷ)

கைமணி :- கர்ஷணம் முதலான கிரியைகளின் ஆரம்பத்திலும் விக்னேஸ்வர பூஜை புண்ணியாக வாசன ஆரம்பத்திலும் தூப தீப நீராஜன காலத்திலும், பலியோடும் போது இவைகள் முடியும் வரை கைமணி அடிக்க வேண்டும். மணியின் சப்தம் இல்லாவிடில் அக்காரியம் பயனற்றது.

வணாநாஉகூ௨ஃ :-

வகநாதஷூ ஜொக்ஷாயஉூ தீநாஉஂ ஹொமஹிஉயெ।
நாஉதுயஂ ஸவூஷிஸெ௺ வ வணாநாஉ வமுஂ ஹவெகு।
வூண௺ாஹ யூவ நைவெஉ௺ வமு௺ாஉள வ தீநாஉகஂ।
வகநாஉஷூ தீவெவ௺ாதிநாஉஂ ஜெவதாதுஸெ॥ (வூகெஷ)

மணிநாதக்கிரமம்:- 1தரம் மோக்ஷத்திற்காகவும், 2தரம் போகத்திற்காகவும், 3 தரம் சகல சித்தியின் பொருட்டும் ஆகும். புண்ணியாகம், தூபம், தீபம், நீராஜனம், நைவேத்தியம், பலி போன்றவற்றில் இரண்டு நாதமும் தீபாராதனையின்போது ஒரு நாதமும் தேவர்களின் நிமித்தம் மூன்று நாதமும் அடிக்கவேண்டும்.

## சங்கு

சங்கு பஞ்சஜனன் என்னும் ஓர் அசுரனுடைய எலும்பில் இருந்து உண்டானது. கிருஷ்ணாவதாரத்தில் தன் குருவான சாந்தீபினியின் புத்திரனைக்கொன்ற அவ்வசுரனிடமிருந்து அந்த சங்கத்தைப் பகவான் எடுத்துக்கொண்டார் எனப் புராணங்கள் கூறுகின்றன. சங்கில் இருக்கும் மூன்று ரேகைகளும் மூன்று பாத வடிவமான காயத்ரியே என்பர். மூன்று அவயமும் உள்ள சங்கம் என்பார்கள். தீபம் இல்லாமல் பூஜை செய்தால் கண் குருடாகும். மணி இல்லாமல் பூஜை செய்தால் காது செவிடாகும். சங்கு இல்லாமல் பூஜை செய்தால் ஊமையாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரிச் சங்கில் பூஜை செய்தால் அஷ்டலக்ஷ்மியை அடையலாம். உள்ளே மூன்று நாக்கு இருப்பது சங்கு. காதில் வைத்து வெளிச்சத்தம் வராமல் அடைத்தால் "ஓம்" என்னும் பிரணவச் சப்தம் கேட்க வேண்டும். வலம்புரிச் சங்கு எடுப்பது கஷ்டம். எந்தச் சங்கமாயினும் அதன் நுனியை வெள்ளியால் அல்லது தங்கத்தகட்டால் (கவசம்போல்) கட்டி அதன் நுனியில் நவரத்தினங்களைக் கோர்த்திருப்பின் ரத்னாபிசேகம் செய்யலாம். பூஜை செய்த சங்க ஜலத்தை மற்றைய ஜலத்துடன் கலந்து அபிஷேகம் செய்ய வேண்டும். கடைசியில் அபிஷேக ஜலத்துடன் கூடிய சங்கத்தை மூன்றுமுறை சுவாமி மீது சுற்றிச் சங்க ஜலத்தால் தனது தலையின் மீது புரோக்ஷித்தால் ப்ரம்மஹத்தி தோஷம் அகலும். இவ்வித மகிமையுடைய சங்க பூஜையை ஆத்மார்த்த - பரார்த்த பூஜைகளில் செய்வது மிகவும் நல்ல பலனைத் தரும்.

வாஞஜநஹ்ாய விஜஹெ| வாவஊநாய யீஊஹி|
தனூஃஶஜூஃ வ்ுவொாஜயாகு||

ஶ௦வெஊநி :-
ஷூாநாஜளஅ தஜஷெஅ வ௱ஜாஷெஅ விஶெஷதஃ|
நெவெெஹ்ாதூாவநெகாலெ வ௱ஷகாலெ தயெவச|
வஞகாலெ விஶெஷெண ஶ௦வயுநி ஊஹாவரொகு|| (ஸ௱கெஜி)

**அபிஷேக ஆரம்பம், அபிஷேகத்தின் முடிவு, பூஜையின் முடிவு, நைவேத்யம் எடுக்கும் நேரம், புஷ்பம் - மாலை சாத்தும் நேரம், இந்த ஐந்து நேரங்களிலும் சங்கத்வனி செய்யவேண்டும்.**

**வாஜ்ஹொாஷகாஞஃ :-**
**ஷாநகாலெ நிவெஜ்ஹஅ வஜிஹுஊண காஞகெ|**
**யு௱வ ஶீவாஜிகாலெ ச உஷஃகாலெ விஶெஷதஃ|**
**வஞகாலெ விஶெஷெண வாஜ்ஹ வொாஷ௱ காரயெகு||**

**அபிஷேகம் நடக்கும் காலம், நைவேத்தியம் செய்யும்காலம், பலிபோடும் காலம், தூப - தீபாராதனை செய்யும் காலம், உஷக்காலம் போன்ற பூஜைக் காலங்களிலும் வாத்திய கோஷம் அவசியம் வேண்டும். (ஸ௱கெஜி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரஸிம்மன்

பிரான்சிலிருந்து, நீர்வேலி, பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா.

*தமிழ் சமஸ்கிருத பாஷைகளில் முக்கியமான ஓர்அறிவுக் களஞ்சியம் நிகண்டு. மேலைத்தேய மொழிகளுக்கு நிகண்டு இல்லை. அகராதிகள் உள்ளன. ஆனால் இந்த அகராதிகள் முக்கியமாக ஆங்கிலத்தில் ஏறக்குறைய 500 வருடங்களுக்கு முன்புதான் எழுதப்பட்டுள்ளன. டாக்டர் ஜான்சன் என்னும் ஆங்கில அறிஞனே முதலாவது அகராதியை எழுதி வெளியிட்டான்.*

*சமஸ்கிருதத்தில் அமரசிம்மன் என்பவனால் சமஸ்கிருத நிகண்டு எழுதப்பட்டது. இந்த நிகண்டுக்கு அவன் "நாமலிங்காநுசாஸநம்" என்று பெயரிட்டுள்ளான். இதில் ஸ்வர்க்க வர்க்கம், திக்வர்க்கம், காலவர்க்கம், தீவர்க்கம், வாக்வர்க்கம், நாட்யவர்க்கம், பூவர்க்கம், புரவர்க்கம், வநௌஷதி வர்க்கம், மநுஷ்ய வர்க்கம், ப்ரஹ்ம வர்க்கம், க்ஷத்ரிய வர்க்கம், வைச்ய வர்க்கம், சூத்ர வர்க்கம் என்பன முக்கியமானவையாகும். இந்த அமரஸிம்மனுடைய மூளை ஒரு கம்பியூட்டரோ என்று இன்று வியந்து நிற்கத்தக்க வகையில் பல விஷயங்களைக் கூறியிருக்கிறான்.*

*உதாரணமாக நாட்ய வர்க்கத்தில் சங்கீத நாடக நாட்யங்கள் சம்பந்தமான இசைக்கருவிகள், தாளவாத்தியக் கருவிகள், நவரஸங்கள், முகவாத்தியங்கள் முதலியவற்றுக்குரிய பெயர்களையும் வேறு பல அரிய விஷயங்களையும் கூறுகிறான்.*

*நாட்யவர்க்கத்தின் அறிமுகத்திலே ஸப்த ஸ்வரங்களைப் பற்றி இவன் கூறும் அழகே அலாதியானது. எப்படிக் கூறுகின்றான் பாருங்கள்*

நிஷாதர்ஷப காந்தார ஷட்ஜமத்யம தைவதா:।

பஞ்சமஶ்சேத்யமீ ஸப்த தந்த்ரீகண்டோத்திதா: ஸ்வரா:॥

*என்று சப்தஸ்வரங்களின் பெயர்களைக் கூறிவிட்டு அந்த ஸப்தஸ்வரங்களையும் எங்கெங்கு கேட்கலாம், எப்படிப்பட்டவை என்பதை அவன் கூறியிருப்பது ஆழமாகச் சிந்திக்கத்தக்கது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷஜ்ஜம் ஊயூரொா வஉதி மாவஸ்ூ ஜஷஹ ஹாஷிண:
ஊஜாவிகம் தூ மாமயாாம் க்ரளஞு: கவணதி ஊயூஜம்।
வாஷ்வ ஹாயாாணெ கூாஞெ விக: கூஜதி வஞுஜம்
ஞெயவதம் ஹெஷதெ வாஜி நிஷாஜம் ஸ்ரூஹதெ மஜ:॥

| | | |
|---|---|---|
| மயில் அகவும் த்வநி | - | ஷட்ஜம் |
| எருதுகள் இடும் சப்தம் | - | ரிஷபம் |
| வெள்ளாடு முதலியன | - | காந்தாரம் |
| கிரவுஞ்சப்பட்சி கூவுவது | - | மத்யமம் |
| வஸந்தகாலத்தில் கூவும் குயிலின் சப்தம் | - | பஞ்சமம் |
| குதிரையிடும் சப்தம் | - | தைவதஸ்வரம் |
| யானையின் சப்தம் | - | நிஷாதம் |

இதிலிருந்து அவன் உலகத்தில் உள்ள யாவற்றையும் நேரில் மிக நுணுக்கமாகப் பார்த்துப் பதிவு செய்து உலகத்திற்கு மிக உபயோகமான வகையில் வழங்கியிருக்கிறானென்பது தெளிவாகிறது. மேலும், உலகத்தையும் பல தேசங்களிலுள்ள மாந்தர்களையும் மாந்தரின் பழக்கவழக்கங்களையும் இவற்றை விட இயற்கையையும் மரங்களையும் பற்றி, மிருகங்களைப்பற்றி, ருதுக்கள், காலங்கள் இவைகளைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து அவற்றைப் பற்றிக் கூறியிருப்பது நம்மை மலைக்க வைக்கிறது.

இவன் ஒரு பௌத்தன்.இவனை ஜைனன் என்பாருமுளர்.

இவன் பௌத்தன் என்றாலும் ப்ரஹ்ம வர்க்கத்தில் யாகங்களின் விபரங்களையும் அதில் பங்கு பற்றுபவர்களைப் பற்றியும் யாகத்தில் உபயோகிக்கும் பொருட்களைப் பற்றியும் கூறியிருப்பதைப் பார்க்கும் பொழுது இவற்றையெல்லாம் ஒரு பௌத்தனால் எப்படி அறிந்து கொள்ள முடிந்தது என்று பெரு வியப்பாக உள்ளது.

இது மட்டுமல்ல ஸ்வர்க்க வர்கத்தில் இவன் கூறியிருப்ப வற்றைப் பார்த்தால் அதாவது இவன் ஒரு பௌத்த ஜைநனாக இருந்தும் ஏனைய சமயத்து தெய்வங்களைப் பற்றிக் கூறியிருப்பது அவனது சம நோக்கினை, சமய சமரஸத்தை, நடுநிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல இவன் மாந்தரில் எவ்வளவு உயர்ந்த பண்பாளன் பரிசுத்தமானவன் என்பதையும் எண்ணி அவனை நினைத்து கைகூப்பி அஞ்சலி செய்யத் தோன்றுகிறது.

சித்தியெய்திய காஞ்சி முனிவர் மஹா பெரியவாள் இந்த அமரஸிம்மனை மிகவும் உயர்வாகக் குறிப்பிட்டதோடு, துவேஷ மெதுவுமில்லாமல் இந்துத்தெய்வங்களினது நாமாக்களை ஸ்வர்க்க வர்க்கத்தில் அழகழகாக அமைத்து வழங்கியிருப்பதை யிட்டு மிக உயர்வாகப் பாராட்டியுள்ளார்கள்.

இந்த அமரசிம்மன் விக்கிரமாதித்த மஹாராஜா காலத்தவ னென்றும், அவனது சபையில் ஒன்பது மணிகளில் இவன் ஒருவனென்றும் அவனது ஆஸ்த்தான வித்துவானாயிருந்தவ னென்றும் தெரிகிறது. அதற்குச் சான்றாக அமரம் புஸ்தக முகவுரையில் பின் வரும் சுலோகம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

𑌧𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌪𑌣𑌕𑌾𑌮𑌰𑌸𑌿𑌂𑌹𑌶𑌙𑍍𑌕𑍁
𑌵𑍇𑌤𑌾𑌲 𑌭𑌟𑍍𑌟 𑌘𑌟𑌕𑌰𑍍𑌪𑌰 𑌕𑌾𑌲𑌿𑌦𑌾𑌸𑌾𑌃
𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌵𑌰𑌾𑌹𑌮𑌿𑌹𑌿𑌰𑍋 𑌨𑍃𑌪𑌤𑍇𑌃 𑌸𑌭𑌾𑌯𑌾𑌂
𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑌿 𑌵𑍈 𑌵𑌰𑌰𑍁𑌚𑌿𑌰𑍍 𑌨𑌵 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯

அமரசிம்மனையும் விக்ரமார்க்கனையும் பற்றிச் சுவையான சம்பவமொன்று கூறப்படுகிறது.

அமரசிம்மன் தானியற்றிய இந்த நாமலிங்கானுசாசன மென்கின்ற நிகண்டினை விக்ரமார்க்க மஹாராஜாவுக்கு அர்ப்பணிக்கப் போயிருந்தான். இவன் ஒரு பௌத்தனாயிருந்த காரணத்தினால் அங்கிருந்த ஏனைய கவிகள் இவன் இராஜ தரிசனஞ் செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.

அமரசிம்மன் மனம் நொந்து தனது நூலைப் பிரசித்தம் செய்யாமல் அதைத் தம் மாணவர்கட்குப் பாடமாக மட்டும் போதித்து வந்தானாம். இவ்வாறு இவன் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது விக்ரமார்க்கன் அவ்வழியே குதிரையில் சவாரி செய்து கொண்டு வந்த பொழுது அமரஸிம்ஹனைக் கண்டான். அவனோடு அளவளாவியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரஸிம்மன் தனது நாமலிங்கானுசாசனமென்ற நிகண்டினைப் பற்றியும் எடுத்துரைத்தான்.

மஹாபண்டிதனான விக்ரமார்க்க மஹாராஜா அப்பொழுது அமரஸிம்மனைப் பார்த்து "இக்குதிரையின் காலிலிருந்து சிதறுகின்ற தூளிக்கு எத்தனை பதங்கள் உமது நிகண்டில் உள்ளன" என்று கேட்டிருக்கிறான். அதற்கு அமரசிம்மன்

ரெணு ஜ்ரெயொ: ஷி யாం யூஜி :
த்ர

வாంஷு ந்ாநஜ்யொ ரஜ:

என்று கூறியுள்ளான். இதைக் கேட்ட விக்ரமார்க்கனுடைய உணர்வுகளை எப்படிப் பதிவு செய்துள்ளார்கள் என்பதை அமரத்தின் முகவுரையில் கூறியுள்ளபடி அப்படியே தரப்படுகிறது.

அந்த விடையைக் கேட்டு "அத்யந்தாநந்தபரனாய் அரை ஸ்லோகத்தில் தூளியின் பர்யாய பதங்களையும் அவற்றில் லிங்க (பால்) விவரணங்களையும் விளக்கி வெளியிட்ட இவன் மஹாபண்டிதனேயாகுமென்றும் இக்கவி தனக்கு ஸமஸ்தான ஆஸ்தான பண்டிதனாயிருத்தல் தக்கதென்றும் மதித்து அவ்வமர ஸிம்ம கவியைத் தனது போஷணையில் அமர்த்திக் கொண்டான்" அதாவது சமஸ்தான வித்துவானாக்கினான் என்ப.

இந்த நாமலிங்காநுசாசனத்தை அமரகோசமென்றும் அமரமென்றும் வழங்குவர். இந்த விக்ரமார்க்க மஹாராஜா ஸம்ஸ்கிருத மஹாபண்டிதன். மிகப்பிரபலமான மஹாராஜா. இவனைப்பற்றி விக்ரமார்க்க சரிதம் என்று சம்ஸ்கிருத நூல் உளது.

இந்த விக்ரமார்க்கனுடைய சரித்திரம் கர்ண பரம்பரையாகக் கூறப்பட்டு வருவதோடு தமிழில் பெரிய நூலொன்றும் இவன் சரித்திரம் பற்றியெழுதப்பட்டுள்ளது. இவனது காலத்தைத் தொடக்கமாகக் கொண்டு வருடங்கள் கணிக்கப்படுகின்றன என்பதை நோக்கத்தில் கொண்டால் இவன் பாரததேசத்தையாண்ட மன்னருள் மிகவும் சிறந்தவனென்று விளங்கும். எல்லாப் பஞ்சாங்கங்களிலும் இந்த விக்கிரம வருடம் வருவது கொடுக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாங்கப்படி இப்பொழுது நடப்பது விக்ரம சக வர்ஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2061. ஆகவே இதன்படி பார்த்தால் அமரசிம்மன் இற்றைக்கு 2061 வருடங்கட்கு முன் வாழ்ந்தவன் என்றாகின்றது.

இவனது கால நிர்ணயம் பற்றி மாறான கால நிர்ணய மெதுவும் இருக்கிறதோ தெரியவில்லை. இவன்பற்றி அதிக விபரம் தெரிந்து யாராவது எழுதினால் நன்று.

இவன் கொடுத்துள்ள தெய்வப் பெயர்களை வைத்து நாம் அந்தந்த தெய்வங்கட்கு அர்ச்சனை செய்யலாம். அவ்வளவு சுத்தமானது. எனது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினால் அதற்கு என்னைப் பெரியோர்கள் மன்னிப்பார்களாக.

நான் 11, 12 வயதுச் சிறுவனாயிருக்கும்போது காளிகோயில் ஒன்றிற்கு எதிர்பாராதவிதமாக பூஜை செய்வதற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். வழக்கமாக நீர்வேலி கதிர்காமக் கோவிலில் தந்தையாருக்குதவியாகப் பூஜை செய்து வந்ததால் முருகன், விநாயகர் இருவரது அர்ச்சனை மந்திரங்கள் மாத்திரமே எனக்குப் பாடம். தீப தூப மந்திரங்கள் பாடமாயிருந்தன.

பூஜை ஆரம்பித்த பின்தான் எனக்கு அம்பாளுக்குரிய அர்ச்சனை மந்திரம் தெரியாது என்பது மனதில் பட்டது. ஆனால் அமரத்தில் அம்பாளுக்கு உரிய நாமாக்கள் பாடமாக்கியிருந்தேன். அதில் காளீ என்றும் வருகிறபடியால் அந்த சுலோகத்தில் வருகிற பர்யாய பதங்களை வைத்து அர்ச்சனை செய்தேன். இது நூற்றுக்கு நூறு உண்மைச் சம்பவம். அம்பாளுடைய நாமாக்களை தொகுத்துள்ள அழகைப் பாருங்கள்.

உமா காத்யாயநீ கௌரீ காளீ ஹைமவதீஶ்வரீ।
ஶிவா பவாநீ ருத்ராணீ ஶர்வாணீ ஸர்வமங்களா॥
அபர்ணா பார்வதீ துர்கா ம்ருடாநீ சண்டிகாம்பிகா
ஆர்யா தாக்ஷாயணீ சைவ கிரிஜா மேநகாத்மஜா”

இப்படிப்பட்ட ஒரு மஹா பண்டிதனைப்பற்றி நாமறிந்து கொள்வது மிக முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ட அவதானி

அட்டஅவதானம், ஆற்றல் மிக்க நல்ல புத்தியுள்ள அறிவாளிடம் மட்டுமே காணப்படும். இந்த அட்டவதானங்களைக் கிரஹணம், தாரணம், ஸ்மரணம், பிரவசனம், யூகம், அபோஹனம், அர்த்தவிஞ்ஞானம், தத்துவஞானம் எனும் புத்தியின் ஆற்றல்களாகப் பெரியோர் போற்றுவர்கள்.

**கிரஹணம்** என்பது கேட்டலாகிய திறனாற்றல்

**தாரணம்** என்பது கேட்டவற்றைத் தன் மனத்தில் பதித்தல்.

**ஸ்மரணம்** என்பது மனத்தில் பதித்தவற்றை வேண்டும் பொழுது நினைவுக்கு கொண்டுவருதல்.

**பிரவசனம்** என்பது மேற்கூறியவற்றைத் தேவை ஏற்படும் பொழுது எடுத்து விளக்குதல்

**யூகம்** என்பது புத்தியின் ஆற்றலால் ஒன்றை வைத்துக் கொண்டு மற்றதனை அறியும் திறன்.

**அபோஹனம்** என்பது தேவையற்ற இடத்தில் மறைக்க வேண்டியவற்றை மறைத்திடல்.

**அர்த்த விஞ்ஞானம்** என்பது ஒரு விடயத்தைப் பற்றி நன்கு தெளிவுபட முழுமையாக அறிதல்.

**தத்துவ ஞானம்** என்பது மேற்சொன்ன ஆற்றல்கள் உடையவராய் மெய்யறிவு பெற்றவராகப் பெரும் மகான் எனப் பெருமை பெறல்.

இந்த அட்ட அவதானங்களும் கைவரப்பட்டோர் மக்களிடையே அட்டாவதானி எனப் பெருமையுடன் போற்றப்படுவார்கள்

**- நீர்வை மணி.**

****************************************

## ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்

**"இந்து மதத்தின் வேத இதிகாச புராண நூல்கள் அனைத்தும் அழிந்து போய், 'ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்' என்ற ஒரு வரி மட்டும் நிலைத்திருந்தாலே இந்துமதம் மீண்டும் புத்தெழில் பெற்று மிளிரும்."**

**— மஹாத்மா காந்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯 𑌪𑍀𑌠𑌂 सर्वानन्दमय पीठम्

# சர்வானந்தமய பீடம்

## SARVANANDAMAYA PEEDAM

அறிவுத்தேன் பருகி, அயலவர்க்கு அன்புத்தேன் வழங்கி, அகிலத்தில் அனைவருடனும் பண்போடு பழகுதலையே மதமாகக் கொண்டு ஆன்மீக வாழ்வு வாழும் அறிவுத்தேட்டம் மிக்க மனிதர்களின் தொடர்பாடல் மையமே,

***சர்வானந்தமய பீடம்.***

அதற்குத் துணை செய்யும் தொடர்பாடல் சாதனமே

***விவித வித்யா.***

**பேரறிஞர்கள் உங்கள் அறிவை யாவருடனும் பகிர்ந்துகொள்ள விவித வித்யாவைப் பயன்படுத்துங்கள்.**

**அறிவைத் தேடுவோர் உங்கள் ஐயங்களைப் போக்கி அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விவித வித்யாவைப் பயன்படுத்துங்கள்.**

***அந்தணப் பெரியோர்கள், சமய ஸ்தாபனங்கள்,***
***சமூக நிலையங்கள், நூலகங்கள், கல்விச் சாலைகள்***
***யாவற்றுடனும் விவித வித்யா***
***தனது நெருங்கிய நட்புறவை வளர்த்துத்***
***தேடல் உள்ளவர்களை இணைத்துவைக்கிறது.***

*ப. சிவானந்த சர்மா*
கந்தசாமி கோவிலடி, இணுவில் மேற்கு, சுன்னாகம், ஸ்ரீ லங்கா.
தொலைபேசி 021 –222 –6004
மின் அஞ்சல் – vividhavidya@hotmail.com
vividhavidya@yahoo.com
இணையத்தளம் – www.geocity.com/sarvanandamayapeedam

## வாருங்கள் , வந்து பயனடையுங்கள்

**அண்மைக் காலத்தில் வெளிவந்த சம்ஸ்கிருத நூல்களை வாங்க விரும்புவோர் எம்மோடு தொடர்பு கொள்ளலாம்.**

## சம்ஸ்கிருத நூல் வெளியீட்டாளர்களே

**உங்கள் நூல்கள் சரியானமுறையில் நல்லறிஞர்கள் பலரிடம் சென்றடையவேண்டுமென்று விரும்புகிறீர்களா?**

**எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். வியாபார நோக்கமின்றி விநியோக வேலைகளைச் செய்து உதவுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலேசியா - கோலாலம்பூர் கந்தசாமி கோவில் சிவாசாரியாராக விளங்கும் மட்டுவில் சமஸ்கிருத பண்டிதர் சிக்ஷாநிபுண

# கி. சதாசிவக்குருக்களுடன்

தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த சமஸ்கிருத பண்டிதர் சிக்ஷா நிபுணர் பிரம்மஸ்ரீ கி. சதாசிவக்குருக்கள் அவர்கள் கடந்த இரு வருடங்களாக மலேஷியா, கோலாலம்பூர் கந்தசாமி கோவிலில் சிவாச்சாரியராகக் கடமையாற்றுகிறார். அண்மையில் அவர் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது (12.9.2004) இல் நல்லூரிலுள்ள அவரது குடும்பத்தவர்களின் தற்போதைய வாசஸ்தலத்திலே சந்தித்து உரையாடினோம்.

மரபுவழிப்பட்ட சம்ஸ்கிருத குருகுலக்கல்வி முறையில் கோண்டாவில் நாராயன சாஸ்திரிகள், நல்லூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆகியோரிடம் வளம்பெற்று அத்துறையில் அடுத்த தலை முறையினர் பலரை உருவாக்கியவராகவும் சாதகாசிரியராக நீண்டகாலம் ஆகமக் கிரியைகளை நெறிப்படுத்துபவராகவும் கிரியாபத்ததி நூல்கள் பலவற்றின் பதிப்பாளராகவும் சிவாசார்யாராகவும் அறிவார்ந்த குழந்தைகளின் அன்புத் தந்தையாகவும் பல்துறையில் சிறப்புற்று விளங்குகின்றவர் இவர். அண்மையில் இவர் ஷஷ்டியப்த பூர்த்தியை மிகவும் அமைதியாகக் கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஒரு நேர்காணல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:- உங்கள் தந்தையார் மற்றும் பாரம்பரிய மரபு ரீதியாக உங்களை உங்கள் துறைகளில் நெறிப்படுத்திய ஆரம்பகர்த்தாக்கள் பற்றிச் சிறிது கூறுவீர்களா?

பதில்:- பொன்னுச்சாமிக் குருக்கள் என அழைக்கப்பட்ட மட்டுவில் கிருஷ்ணசாமிக் குருக்கள்தான் எமது தந்தையார். இளவயதிலேயே அவரை நாம் இழந்துவிட்டோமென்றாலும் மிகச் சிறுவயதிலேயே எமக்கு வழிகாட்டி, எம்மை சமஸ்கிருதக் கல்வியிலும் குருத்துவப் பணியிலும் நெறிப்படுத்தி வைத்தவர் அவர்தாம், தமது முன்னோர் வழியில் எம்மையும் நடைபோடுமாறு தொடர்புப் பாலமாக நின்று தாம்பெற்றதை எம்மிடம் தந்து மறைந்தவர் அவர்.

கேள்வி:- உங்கள் குடும்பச் சூழல் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததா அல்லது சூழல் வேறுபட்டிருக்க நீங்கள் தனித்துவமாக வளர்ந்தீர்களா?

பதில்:- குடும்பச் சூழல் என்னை இத்துறையில் வளர்ப்பதாகவே அமைந்திருந்தது. தந்தையாரின் விருப்பம், அதை ஏற்கும் எனது இயல்பு, இவற்றுக்கு ஏற்பவே எனது தமையனார் சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்கள், மைத்துனர் சி. சிதம்பரநாதக் குருக்கள் (திருக்கணித பஞ்சாங்க கணிதர்) ஆகியோரும் எனக்கு வழிகாட்டிகளாக இருந்தமையால் மிகவும் இளவயதிலிருந்தே நான் எனது துறைகள் நோக்கி நேர்த்தியாக நகர்த்தப்பட்டேன்.

கேள்வி:- உங்கள் இளமைக்காலக் கல்வி முறை பற்றிக் கூறுங்கள்

பதில்:- நான் முன்னர் குறிப்பிட்டபடி தந்தையார், தமையனார், மைத்துனர் ஆகியோரிடம் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட பின் கோண்டாவில் கி. நாராயணசாஸ்திரிகளிடம் வேதாத்தியனமும் சமஸ்கிருத பாஷையும் கற்கத் தொடங்கினேன். அக்காலத்தில் சாஸ்திரிகள் கோண்டாவிலிலிருந்து நுணாவில்வரை சைக்கிளில் வந்து எமக்குப் பாடம் சொல்லித் தருவார்.

இதேகாலத்தில் தமிழ்மொழி இலக்கண இலக்கியங் களையும் குருத்துவ சேவைக்குரிய ஆகமக் கிரியை சம்பந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களையும் கற்றேன்.

சுமார் 18 வயதிலிருந்து நல்லூர் நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் முறையாக சமஸ்கிருத இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றுக்கொண்டேன். சுமார் ஐந்து வருடகாலம் அவரிடம் கற்று சமஸ்கிருத பண்டிதராக நான் வெளிவர முடிந்தது.

கேள்வி:- இந்த மிகநீண்டகால குருகுலக் கல்வியில் நீங்கள் சிறந்து விளங்குவதற்கு ஏதுவான வேறு காரணிகளும் உண்டா?

பதில்:- ஆம், நான் பெரும்பாலும் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பிரதம மணாக்கன் எனக் கூறத்தக்க வகையில் முதன்மை நிலையில் இருந்ததால் அவர் என்மீது மிகவும் மதிப்பு வைத்திருந்தார். மிகுந்த கண்டிப்பு இருந்த அதே நேரத்தில் அதிக அன்பும் வைத்திருந்தார். இளம் மாணாக்கர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியையும் எனக்கு அவர் தந்திருந்தார்.

கற்ற வேளையைவிடக் கற்பித்த வேளையில் நான் வளம்பெற முடிந்தது. கற்பித்தலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்விப்பதுடன் கற்பிக்கும் வேளையில் அவதானிக்கும் இயல்பும் எனது ஆசிரியரிடம் இருந்தது. தவறாகச் சொல்லிக் கொடுத்தால் பின்னர் தனியாக அழைத்துச் சுட்டிக் காட்டுவார்.

கேள்வி:- இவ்வாறு நீங்கள் பெற்ற அனுபவம் பின்னர் உங்களுக்கு எவ்வாறு உதவியது?

பதில்:- நான்மிக அண்மையில்தான் சிவாச்சாரியாராகக் கடமையாற்றத் தொடங்கினேன். அதற்கு முன் மிக நீண்ட காலம் கோயில் அர்ச்சகராகவும் சாதகாசிரியராகவும் கடமை புரியும் நேரம் தவிர எனது பெரும்பாலான பொழுதை நான் சமஸ்கிருத ஆசிரியராகவே செலவிட்டிருக்கிறேன். இன்றும் எனது மாணவர்கள் பலர் சிறந்த சிவாச்சாரியர்களாகவும் சமஸ்கிருத மொழியாற்றல் மிக்கவர்களாகவும் விளங்குகிறார்கள் இந்தப் பெருமை எனக்குக் கிட்டியமைக்குக் காரணம் அந்த ஆசிரியப் பயிற்சி தான்.

கணபதீஸ்வரகுருகுலம், சிவானந்த குருகுலம், வேதாகம ஆய்வு நிறுவனம், நல்லூர் சிவன் கோவில் முதலிய நிறுவனங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத பாடசாலைகளிலும் தனிப்பட்ட முறையில் வேறுபல இடங்களிலும் நான் ஆசிரியராகக் கடமை புரிந்திருக்கிறேன்.



*கேள்வி:-*

*உங்கள் மனைவி, பிள்ளைகள் பற்றி......*

*பதில்:-*

மனைவி லலிதா எனது சேவைகளுக்கு உறுதுணையாக இருக்கிறார். நான்கு பெண் பிள்ளைகள் எனக்கு உள்ளனர். நால்வரும் பட்டதாரிக் கல்வி பெற்றவர்களே. அரச சேவையிலும் உள்ளவர்கள். மூத்தமகள் திருமணமாகி வெளிநாடு சென்றுள்ளார். ஒரு மகள் என்னிடமே சமஸ்கிருதத்தைக் கற்று அதன் மூலம் பல்கலைக்கழகம் புகுந்தவர் என்பது சிறப்பான விடயம். பொதுவாகவே எனது பிள்ளைகள் கல்வித்தகுதியில் முதன்மைபெறவைத்தமையே எனக்குப் பெருமையான விடயமாகும்.

*கேள்வி:- தற்கால சம்ஸ்கிருதக் கல்வி நிலை பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?*

*பதில்:-* எங்களைப்போல இன்றைய மாணவர்கள் பொறுமையாக நீண்டகாலம் கல்விகற்க விரும்புகிறார்களில்லை குடும்பச்சூழல் பொருளாதாரநிலைமை ஆகியவை காரணமாகப் பலர் இளவயதிலேயே குருத்துவ சேவைகளில் ஈடுபடுவதால் அவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. மேலும் சம்ஸ்கிருத இலக்கண இலக்கியங்களைக் கற்பதில் அதிக நாட்டமில்லாமல் கிரியைகளுக்கு வேண்டிய ஆகமக் கல்வியே போதும் என இன்று பலர் எண்ணுகிறார்கள்.

இது தவறான போக்காகும். எவ்வளவு சிரமப்பட்டும் கல்வியை வளர்க்க வேண்டும். பெற்றோர் தமது சிரமத்தைப் பாராமல் பிள்ளைகளைக் குருகுலக் கல்வியில் ஈடுபடுத்த வேண்டும். தொடர்ச்சியான கற்கையும் குருவுடன் கூடியிருத்தலுமே மரபுவழிப் பயிற்சிக்கு வளம் சேர்க்கும்.

மேலும், வேதாத்தியனத்திற்கு அதிகாலை வேளை மிக உகந்தது. இவ்வாறு உரிய வேளைகளில் அந்தந்தப் பாடங்களை முறையாகக் கற்பிக்கக் குருகுலக்கல்வி வழிவகுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:- மலேஷியாவில் உங்கள் அனுபவங்கள் எப்படி?**

பதில்:- மலேஷியாவிலே பெரும்பாலும் யாழ்ப்பாணத்துக் குருமாரே உள்ளனர். அதனால் இங்குள்ளது போலவே கிரியைகள், வழிபாட்டு முறைகள், ஆலய நடைமுறைகள் எல்லாம் அமைந்துள்ளன. சீனர்கள், இஸ்லாமியர்கள்கூட இந்து ஆலயங்களுக்கு வந்து தமது வாழ்க்கைத் துன்பங்களைக் கூறி அதற்குப் பரிகாரங்கள் செய்து பலன் பெற்று மகிழ்கிறார்கள். மிகுந்த நம்பிக்கையுடையவர்களாக மலேஷிய மக்கள் உள்ளனர். முக்கியமாக நான் கடமை புரியும் கோலாலம்பூர் கந்தசாமி கோவிலில் உள்ள சண்முகப் பெருமான் மீது மிகுந்த நம்பிக்கையும் பயபக்தியும் உடையவர்களயுள்ளனர்.



கேள்வி:- பிறமதத்தாக்கங்களாலும், நாகரிக மோகங்களாலும் பலர் நமது சமயக்கிரியைகளில் அக்கறை குறைந்தவர்களாக அல்லது சந்தேக நோக்கில் கேள்வி கேட்பவர்களாக நம்மவர்கள் மாறுகிறார்கள் என ஒரு குற்றச் சாட்டு இருக்கிறதே அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- அவ்வாறு நான் கருதவில்லை. எனது அனுபவத்துக்கு எட்டியவரை மலேஷியாவில் அதிக அளவில் பக்தி விசுவாசம் உடையவர்களையே சந்தித்திருக்கிறேன். பலர் ஆர்வம் காரணமாக வினாக்களை எழுப்புகின்றனர். அவர்களுக்கு உரிய விளக்கம் கொடுத்தால் திருப்தியடைகின்றார்கள்.

கேள்வி:- மறக்கமுடியாத அனுபவங்கள்பற்றி..........

பதில்:- எனது கற்பித்தலைக் கவனித்த எனது குருவிடமிருந்தே "சிக்ஷாநிபுண" என்ற பாராட்டுக் கிடைத்தமை. 2002ஆம் ஆண்டில் மலேஷியாவில் கோவில் கடமையேற்ற மூன்று மாத காலத்திற்குள்ளேயே கோவிலின் 100ஆவது ஆண்டுவிழாவின்போது வாழ்க்கையில் இலகுவில் காணமுடியாத கனகாபிஷேக வைபவத்தில் கலந்துகொண்டமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியின் படிகள் – 2

# வாழக்கையில் முன்னேறுவதற்குப் பிரச்சனைகளும் அவசியம்

## – சுவாமி அக்ஷராத்மானந்த



ஒரு பூ மலர வேண்டுமென்றால் நீரும் காற்றும் மண்ணும் மட்டுமே போதுமானவை அல்ல. இம் மூன்றும் அந்தப் பூவை மொட்டு நிலைக்கு மட்டும் கொண்டு வர முடியும். ஆனால் சிறிது வெயில் தான் மொட்டை மலரச் செய்யும். அது போல் நமக்கு வரும் பிரச்னைகளை நாம் சரியாகப் புரிந்து கொண்டால் அவை நமக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை இந்தக் கட்டுரை தெளிவாக்குகிறது.

(பண்டிதர் ச.ப. சர்மா அவர்களின் மூத்த புதல்வர் பொறியியலாளர் பிரம்மஸ்ரீ ப. நித்தியானந்த சர்மா இப்போது பாரதத்திலே ஆந்திரப் பிரதேசத்தில் ராஜமந்திரியில் சுவாமி அக்ஷராத்மானந்தாவாக இராமகிருஷ்ண மடத்தில் சேவைபுரிகிறார். அவர் எழுதிய இக்கட்டுரை இராமகிருஷ்ண விஜயம் ஆகஸ்ட 2004 இதழில் பிரசுரமாகியது. அச்சஞ்சிகையின் ஆசிரியருக்கு நன்றியுடன் நாம் அதனை மறுபிரசுரம் செய்கிறோம்.)

இரண்டு குழுக்களுக்கிடையே கால்பந்தாட்டப் போட்டி ஒன்று நடந்தது. பல ரசிகர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கால் பந்தாட்டம் என்றால் என்ன என்பதே தெரியாத ஒருவனும் அதில் இருந்தான். ஆட்டத்தைச் சிறிது பார்த்த பின் அவன் தன் நகரத்து நண்பனிடம் "அவர்கள் ஏன் ஒரு பந்துக்காக இவ்வளவு சண்டையிடுகிறார்கள்? என்னிடம் கேட்டால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பந்து தருவேனே" என்றான்.

அவன் ஒவ்வொருவருக்கும் ஒரு பந்து தந்த பிறகு ஆட்டமே இருக்காதே! ஒருவனுக்குப் பந்து பிரச்னையாகத் தோன்றுகிறது: மற்றொருவனுக்கு அதே பந்து வாய்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புத்திசாலி எல்லாத் தடைகளையும் வாய்ப்புகளாகக் காண்பான். ஆனால் அறிவிலி ஒருவனுக்கு வாய்ப்புகளும் தடைகளே" என்பார்கள்.

மாடி ஏற விரும்பினால் நீங்கள் படிகளில் ஏறித்தான் போக வேண்டும். ஆனால் அந்தப் படிகளையே தடைகளாகக் காண்பவர்கள் தாம் செல்ல வேண்டிய பாதையைத் தேடிக் கொண்டே இருப்பார்கள். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஒரு காற்றாடி காற்றை எதிர்த்துத்தான் பறக்கும். அது காற்றுடன் பறப்பதில்லை.

நீங்கள் ஒரு திட்டத்தைச் செயலாக்க முனையும்போது உங்களைச் சிலர் எதிர்க்கிறார்கள். உங்கள் திறமையைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் ஒரு சராசரி ஆள் என்றால் அத்திட்டத்தைத் துவக்கவே தயங்குவீர்கள். ஆனால் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவுள்ளவன் எதிர்ப்புகளையே தனக்கு உதவும் கருவிகளாக்கித் தன் வேலையில் முனைவான்.

அப்படிப்பட்ட மனிதனுக்கு எதிர்ப்புகள் எல்லாம் ஆசிகளாகி விடும். 'பாய்சன்'(விஷம்) பாயாசமாக மாறிவிடும்.

"செயல்திறன் கொண்ட மனிதன் தன்மீது மற்றவர்கள் எறியும் கற்களையே வாழ்க்கைக்கு நல்ல அடித்தளமாக்கிக் கொள்வான்" என்பார்கள். இதைப் பற்றி நீதிசதகம் என்ன கூறுகிறது தெரியுமா?

"சாதாரண மனிதர்கள் எதிர்ப்புக்கு அஞ்சி எந்த நல்ல செயலையும் செய்வதில்லை. நடுத்தரமானவர்கள் செய்ய வேண்டிய வேலையைத் துவக்கிவிட்டுப் பிரச்னைகள் வரும்போது அவற்றை நிறுத்திவிடுவார்கள். ஆனால் திறமைசாலிகளோ மீண்டும் மீண்டும் எதிர்ப்புகளையும் பிரச்சனைகளையும் எதிர் கொண்டாலும் வெற்றி பெறும் வரை முனைந்து கொண்டே இருப்பார்கள்."

நெப்போலியன் "வெற்றி என்பது இடை விடாது முயல்பவர்களுக்கு மட்டுமே சொந்தம்" என்றார். கார்லைல், "எந்தவொரு சிறந்த பணியும் முதலில் செய்ய முடியாததாகத்தான் தோன்றும். நீ செய்ய வேண்டிய பணியைப் பற்றி நன்கு அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அதை 'ஹெர்குலீஸ்' போல செயல்திறனுடன் நிறைவேற்ற வேண்டும்" என்கிறார்.

பிரச்னைகள் என்றால் என்ன?

உன் திறமையால் தீர்வு காண வேண்டிய ஒரு சூழ்நிலைக்குப் பெயரே பிரச்னை. பிரச்னைகள் இருந்தால் பணியை உடனே துவக்க முடியாது. நமக்குத் தெரியாத சூழ்நிலையாகவோ, வேலையாகவோ அல்லது அறிமுகமில்லாத ஆட்களாகவோ இருக்கலாம். பிரச்சனையை எப்படி எதிர்கொள்வது என்பது தெரிந்துவிட்டால் பிரச்னையே மறைந்து விடும். பிரச்னை என்பது நிலையானதல்ல. அது தோன்றி மறையக்கூடிய ஒரு சூழ்நிலையே.

உதாரணமாக சாப்பிடுவது என்பது நம் அனைவருக்கும் எளிய வேலை. ஆனால் குழந்தைக்கு அது கடினமானது. தாய் குழந்தைக்கு முதலில் உணவு ஊட்ட வேண்டும். பிறகு குழந்தை பல தவறுகளைச் செய்து சாப்பிடும் முறையைக் கற்றுக் கொண்ட பிறகு அது எளிதாகிறது. இது போலவே டைப் செய்வது, கார் ஓட்டுவது போன்ற எந்த ஒரு வேலையும் ஆகும்.

பிரச்னை தீர்ந்துவிட்டால் அதன் பின் என்ன ஆகும்? அதிலிருந்து புதிய பாடம் ஒன்றை நாம் கற்றிருப்போம். அடுத்த முறை அதே போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ளும்போது பயமின்றி முதல் முறை இருந்தது போன்று நடுக்கமில்லாமல் நம்பிக்கையுடன் அந்தச் சூழ்நிலையை எதிர்கொள்வோம்.

அப்பிரச்னையிலிருந்து நாம் நல்ல பாடம் கற்றுக் கொண்டு அதிலிருந்து நல்ல பயனும் பெற்றிருந்தால் அதையே நமக்குக் கிடைத்த புதிய வாய்ப்பு எனலாம். வந்தபோது அதை நாம் விருப்பமின்றியே அதனால் நாம் பெறப் போகும் பயனை அறியாமலே எதிர் கொண்டிருப்போம்.

ஆனால் பிரச்னைகள் முழுதும் முடிந்த பின் அதனால் நாம் பயனடைந்துள்ளதை உணர்வோம்.

சரி, முதலிலிருந்தே, அதாவது பிரச்னை வரும் முன்பே வரப்போகும் பிரச்னை நமக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உணர்வுடன் அதைச் சந்தித்தால் நீங்கள் அதிகமான ஆர்வத்துடனும் சந்தோஷத்துடனும் அந்தப் பிரச்னையைச் சந்தித்து அதனால் அதிகப் பயன் பெறலாம் அல்லவா?

இதனால் என்ன தெரிகிறது? சுவாமி சின்மயானந்தர் கூறுவார் "ஒவ்வொரு வாய்ப்பிலும் பிரச்னைகளை மட்டுமே காண்பது வருத்தத்திற்குரிய செயல். அது நீ திறனற்ற மனிதன் என்பதைக் காட்டுகிறது. மாறாக ஒவ்வொரு பிரச்னையிலும் ஒரு வாய்ப்பைக் கண்டால் நீ வெற்றியைத் தழுவும் மனிதனாகவும் ஆக்கச் சக்தி நிறைந்தவனாகவும் கருதப்படுவாய்"

நமது பார்வையும் கண்ணோட்டமும்தான் பிரச்னைகளையும் சூழ்நிலைகளையும்விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. பிரச்னைகளுக்கு நன்றி சொல்லுங்கள்.

வாழ்க்கையில் வெற்றியடைந்த சிலர் "நான் என் துன்பங்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன். என் துன்பங்கள் நீங்கிய பிறகு நான் அந்த அனுபவத்திலிருந்து அதிக தெம்புடன், அதிக சக்தியுடன் வெளிவந்துள்ளேன். என் துயரங்களும் துன்பங்களுமே என் வளர்ச்சிக்குத் தூண்டுகோல். என் நம்பிக்கைக்கு அடித்தளம் என்று கூறியுள்ளனர்.

மற்றொருவர் "பிரச்னைகள் இல்லாவிட்டால் என்னால் ஒன்றுமே செய்ய முடியாது. அவை தான் என்னைப் பதப்படுத்துகின்றன" என்கிறார்.

வாழ்க்கை என்றால் என்ன என்று கேட்ட போது சுவாமி விவேகானந்தர், "வாழ்க்கை என்பது தன்னை அழுத்தி மூச்சுமுட்ட வைக்கும் சூழ்நிலைகளை எதிர்த்து மனிதனை மேலெழுந்து வரச் செய்யும் முயற்சியே ஆகும். அத்தகையச் சூழ்நிலையில் மனிதனின் விரிவடையும் மனமும் முன்னேறிச் செல்ல வைக்கும் ஆர்வமும் தான் வாழ்க்கை எனப்படும்" என்றார்.

ஒரு பட்டுப்பூச்சி கூட்டைவிட்டு வெளிவர முயன்று கொண்டிருந்தது. சிறிதளவு கூட்டை உடைத்து விட்டு ஓய்ந்து போனதுபோல் காணப்பட்டது. அதைக் கண்ட இரக்க குணமுள்ள ஒருவன் அதற்கு உதவ நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கத்தரிக்கோலால் கூட்டைச் சிறிது வெட்டி பூச்சியை வெளியே வரச் செய்தான். வெளியே வந்த பூச்சி பறக்க முடியாமல் தவித்தது. காரணம் அது கூட்டை உடைத்து வெளிவரும் முயற்சியால்தான் அது தன் இறக்கைகளுக்கு வலுவூட்டுகிறது. ஆனால் அப் பூச்சி சுயமுயற்சியால் வெளி வராததால் இறக்கைகள் இயல்பான பலம் பெறவில்லை. அதனால் அது நிரந்தரமாகவே பறக்க முடியவில்லை.

சில நேரங்களில் போராட்டங்களும் பிரச்னைகளும் நமக்குத் தேவையானவையே. நாம் வாழ்க்கையில் பிரச்சனைகளையே எதிர்கொள்ளாமல் பொத்திப் பாதுகாப்பாக காப்பாற்றப்பட்டுக் கொண்டிருந்தால் அது நம்மை வலிமையற்றவர்களாக ஆக்கிவிடும்.

மனவலிமையை மட்டுமல்ல, உடல் வலிமையையும் அது பாதிக்கும் அப்படியிருந்தால் நாம் சக்தியற்றவர்களாகத்தான் இவ்வுலகில் வலம் வர வேண்டி வரும்.

**கோப்பாய் சிவம் அவர்களின் மூன்று நூல்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. தார்மீகக கோபங்கள் சிறுகதைத்தொகுதி இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் 20-06-2004இல் வெளியிடப்பட்டது.**

**அருள்வழங்கும் மாரியம்மன், இதுதான் இந்துமதம் ஆகிய இரு ஆன்மீக நூல்களும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 09-07-2004இல் வெளியிடப்பட்டன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுத் திகதி நீடிப்பு.

விவிதவித்யா 6ம் இதழில் அறிவிக்கப்பட்ட ***வேத சிவாகம அறிவுப் போட்டி*** அதிகமான வாசகர்கள் கலந்துகொள்ளாத காரணத்தாலும் பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும் முடிவுதிகதி நீடிக்கப்பட்டுள்ளது. பரிசுத் தொகையும் அதிகரிக்கப் பட்டுள்ளது.

**பரிசுத் தொகை ரூபா இரண்டாயிரம்!**

**முடிவு திகதி 01–01–2005.**

***விவிதவித்யா*** ஆசிரியர் ***கோப்பாய் சிவம்*** அவர்கள் அண்மையில் லண்டன்மாநகர் சென்று திரும்பியுள்ளார். வடமராட்சி கொம்மந்தறையைச் சேர்ந்த ***கம்பர்மலை வித்தியாலய*** பழையமாணவர்சங்க ஐக்கிய ராச்சியக் கிளையினரின் அழைப்பில் அங்கு சென்ற அவர் 14-07-2004இல் நிகழ்ந்த ***பூபாள ராகங்கள்*** கலைக் கதம்ப நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வழக்காடுமன்றத்தின் நீதிபதியாகவும் கடமையாற்றினார்.

தொடர்ந்து பல ஆலயங்களிலும் சமய சமூக நிறுவனங்களிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். ***தீபம்*** தொலைக்காட்சி மற்றும் ***ஐ.பி.சி.*** வானொலி நிலையம் போன்றவற்றிலும் இவரது பேட்டிகள் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை வளர்த்துப் பரிசினை வெல்லுங்கள்.

2,000/=

**முதற்பரிசு ரூ. ~~1,000.00~~**

பத்துப் பேருக்குப் பரிசு

# வேத சிவாகம அறிவுப் போட்டி

(சிவாசார்ய மாணவர்களுக்கானது)

*1. சுப்பிரமணியரின் தியானமொன்றில் "ரச வக்த்ரம்" என வருகிறது. இதனை எவ்வாறு விளக்குவீர்? (ஷாண்முக ரக்தநிப திவ்யாஸவக்த்ரம்)*

*2. கிரியைகளில் ஸம்ஹிதயா சுஹிருதிய என்று கூறியதும் செய்யவேண்டியது என்ன?*

*3. அட்டதிக்குப் பாலகர்களில் ஒருவருடைய பெயர் யாகாரம்ப்தில் பூஜிக்கப்படும் வேறொருவருக்கும் உள்ளது. இருவரும் யார், யார்?*

*4. க்ஷேத்ரபாலருடைய யாகசாலையில் சண்டேஸ்வரர் எங்கே இருப்பார்?*

*5. யாகசாலையில் தெற்குத் திசையில், கிழக்குப்பக்கத்தில் கும்பம் இல்லாமல் ஓரிடம் இருக்கிறது. இது எதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? இந்த இடத்தைச் சரியாக வரையறுக்கவும்.*

*6. கிருகயஜ்ஞும், கிரகயஜ்ஞும் இரண்டிற்கும் வேறுபாடு என்ன? விளக்குக.*

*7. க்ஷநொ மாஹ: ஷண்மாவெஷ்வ வாமுநெசுஸா தஃ வ்ரஹாஃ। இந்த அடிகள் எந்தத் தோத்திரத்தில் வருகின்றன?*

***விவிதவித்யா முகவரிக்கு 01-01-2005 இன்முன் மிகச்சரியான விடைகளை அனுப்பிவைக்கும் அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசு உண்டு.***

**பாடசாலை மாணவர்களுக்குகந்த இந்துசமய அறிவுப் போட்டி அடுத்த இதழில் இடம்பெறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிதவித்யா - 8

டிசம்பர் 2004 இல் உங்கள் கைகளில் கிடைக்கும்.

**புத்தகத் தோட்டம்**

போட்டி முடிவுகள்

**புதிய போட்டிகள்**

பட்டி மண்டபம்

**பாட்டி மண்டபம்**

சோதிட விஞ்ஞானம்

**வெற்றியின் படிகள்**

புகழ்பூத்த பூசுரர்கள்

**சம்ஸ்கிருதம் வளர்த்த சான்றோதர்கள்**

துறைசார் அறிஞர்களின் நேர்காணல்

மற்றும் வழமையான அம்சங்கள் யாவும்

**உங்கள் சந்தாக்களை உடனே அனுப்பி உங்கள் இதழ்களை உறுதிப்படுத்துவதுடன் விவிதவித்யாவின் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**

**ஆண்டுச் சந்தா ( 4 இதழ்கள்)ரூ. 100.00**

**ஆயுள் சந்தா ரூ. 1000.00**

முகவரி
ப.சிவானந்தசர்மா
"விவிதவித்யா"
கந்தசாமிகோயில் அருகில்,
இணுவில், சுன்னாகம்,
ஸ்ரீலங்கா.

☎ 021-222-6004
e-mail:
vividhavidya@hotmail.com
vividhavidya@yahoo.com
Web site: www.geocity.com/sarvanandamayapeedam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org